உ

கடவுள் துணை.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ சபாநர்தர்பேரில்

# முத்துத்தாண்டவர் கீர்த்தனை.

இவை.

நெல்லாத்தூர்.

**P. இராஜகோபால் நாயுடவர்கள்**

பார்வையிடப்பட்டு.

சென்னை–சூளை.

## பு. முனிசாமி நாயுடு

அண்டு பிரதர் அவர்களது,

சங்கநிதிவிளக்க அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] 1927 [அணா-4.

# முக்கியகவனிப்பு.

கீழ்கண்ட புஸ்தகமும் இன்னும் இதரபுஸ்தகங்கள் தேவையானவர்கள் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதினால் வீ. பீ. தபால் மூலியமாய் அனுப்பப்படும் தபால் சார்ஜ் பிரத்யேகம்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| தேவேந்திரனுத் மாயாஜால வினோதம்-2000 சேர்ந்தது | 1 | 0 |
| மதிமோசக்களஞ்சியம் | 1 | 0 |
| மேற்படி 2-ம் பாகம் | 1 | 0 |
| மாண்ட ரகசிய சாஸ்திரம் | 1 | 0 |
| மனோவசிய சாஸ்திரம் | 1 | 8 |
| ஆகாயப்புளுகன் | 0 | 6 |
| திடீர்ப்புளுகன் | 0 | 6 |
| ரூபாவதி அல்லது சிதம்பர சாமியார் | 12 | 0 |
| ஸ்ரீகிருஷ்ணுஷ்ட கலியாணம் | 1 | 0 |
| மாதர் மநுதர்ம நூல் | 0 | 6 |
| ஆனந்தமனோகரி | 0 | 10 |
| சிவவிஷ்ணுக்ஷேத்திரவிளக்கம் | 1 | 4 |
| நாலாயிர திவ்யபிரபந்ததிரட்டு | 0 | 8 |
| வண்ணத்திரட்டு இலக்கணத் துடன் | 0 | 8 |
| தலைவாக்கி அபூர்வசிந்தாமணி | 1 | 0 |
| ஆங்கிலபோதகன் | 2 | 0 |
| சம்பூர்ணராமநாடகம் 12-பாகம் | 2 | 0 |
| நாஞ்ஜீவவாத கட்டளை | 0 | 8 |
| வான்மீகர் ஆருட சாஸ்திரம் | 0 | 4 |
| கட்டளைக்கொத்து | 1 | 0 |
| மேற்படி கிளேஸ் | 1 | 8 |
| போகமுனிவர் அருளிச்செய்த சப்தகாண்டம்-7000-பாடல் | 4 | 0 |
| பகவத்கீதை வசனம் | 1 | 8 |
| திருக்குறல்-மூலம் | 0 | 6 |
| கந்தப்புராணச்சுருக்கம் | 0 | 8 |
| பெரியபுராணவசனம் | 1 | 4 |
| திருவிளையாடல்புராணவசனம் | 1 | 4 |
| கோயிற்புராண வுரை | 1 | 4 |
| சேது புராணம் | 2 | 8 |
| வில்லிபுத்தூரார் பாரதம் | 3 | 8 |

| | ரூ. | அ. |
|---|---|---|
| வைத்திய மூலிகைஅகராதி | 1 | 0 |
| வைத்தியசாரசங்கிரகம் | 1 | 4 |
| அராபிக்கதை | 2 | 8 |
| விக்கிரமாதித்தன் கதை திக்கு பெரியயெழுத்து | 2 | 8 |
| திருப்போரூர் சன்னதிமுறை | 0 | 12 |
| மேற்படி கிளேஸ் | 1 | 0 |
| திருத்தணிகை சன்னதிமுறை | 0 | 12 |
| ஆதிபர்வம் தனி | 1 | 8 |
| ஆத்மபுராணவசனம் | 8 | 0 |
| ஆனந்தராமாயணம் | 6 | 0 |
| கம்பராமாயணவசனம் 2-வால்யம் படத்துடன் | 8 | 10 |
| ஷை மட்டம் ஒரேகட்டடம் | 4 | 8 |
| கெருடபுராண வசனம் | 0 | 6 |
| சாணந்தகணேசபுராணம் | 0 | 2 |
| சிவராத்திரிபுராணவசனம் | 0 | 6 |
| ஸ்ரீகாளஅத்திபுராண வசனம் | 0 | 6 |
| தேவிபாகவதவசனம் | 9 | 0 |
| அனுமந்தபராக்கிரமம் | 1 | 8 |
| சிவபராக்கிரமம் | 1 | 8 |
| சுப்பிரமணிய பராக்கிரமம் | 2 | 0 |
| தேவிபராக்கிரமம் | 1 | 4 |
| ஸ்ரீராமபராக்கிரமம் | 0 | 6 |
| நாலடியார் | 1 | 8 |
| மஸ்தான்சாயபு பாடல் | 1 | 4 |
| வன்னியபுராணம்மூலம்-உரை | 1 | 8 |
| விநோதமஞ்சரி ரப்பு | 1 | 8 |
| விநாயகபுராணவசனம் | 5 | 0 |
| விராடபர்வம தனி | 1 | 8 |
| திருவாய்மொழி | 2 | 8 |
| திருக்கழுக்குன்றம் வேதகிரீஸ்வரர் பேரில் இலிங்கப்பதிகம் | 0 | 1 |
| திருவரங்கச்சன்னதிமுறை | 0 | 4 |

எமது விலாசம்:—


P. M. N. & BROTHER

பு. இராஜு நாயுடு அவர்களது,

சந்திரிகை விளக்கம் பிரஸ்,

சூளை மதராஸ்.

உ

கடவுள் துணை.

# முத்துத்தாண்டவர் சரித்திரம்.

சீர்தருகாவிரி திகழ் சோழநாட்டில் அடியார்க் கருள்செய்யும் பொருட்டு பரமசிவம் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிராநின்றஸ்தலங்களுள் ஒன்றாகியதிருஞானசம்பந்தசுவாமிகள் திருவவதாரஞ்செய்துஞானப்பாலுண்டருளியமகாக்ஷேத்திரமாகிய சீர்காழியில் வீற்றிருக்கின்ற தோணியப்பருக்குவாச்சிபத்தொண்டுசெய்யும் பேறுபெற்ற குலத்திற்றோன்றித் தாண்டவனென்கிற பேர்பெற்றுச்சிவநேசத்துடன் வளர்ந்து வருகையில் முன்வினையினால் கர்மவியாதியொன்று சம்பவிக்க அதனால்தங்கள்குலத்துக்குரியதாகியதொழில் கற்றுக்கொள்வதற்கில்லாமல்காலந்தோறும்ஆலயத்துக்குப்போய்ப் பிரமபுரீசரையுந் திருநிலை நாயகியையும் தோணியப்பரையும் பயபக்தியுடன் தரிசனஞ்செய்தும், மற்றகாலங்களில் அந்தசிவாலயத் தொண்டு செய்கின்றவராய்ச் சிவநேசத்துடன் சிவநாம கீர்த்தனம் பாடிக்கொண்டிருக்கும் ஒருதாசிவீட்டுக்குப்போய் அந்தஸ்தோத்திரத்தைக் கேட்டுக்கொண்டிருப்பார் அவள்சுற்றத்தாருக்குப்இவர்சுற்றத்தாருக்கும் அந்நியோந்நிய மின்மையால் அவள் வீட்டுக்குப்போகிறது சம்மதியில்லாமல் அவரிடத்தில் வெறுப்புற்றுஆதரணைசெய்யாமலிருந்தார்கள் அப்படியிருக்கையில்ஒருநாள்மிகவும், மனவருத்தமடைந்து சிவாலயத்திற்போய்ச் சுவாமியையும் அம்மையையும் தரிசித்துத் தோத்திரம்பண்ணிக்கொண்டிருந்துபசியினால் சரீரத்தளர்ச்சியுண்டாகச் சோகத்துடன் வாகனகிடங்குக்குள்போய்ப்படுத்துக்கொண்டு சிவத்தியானத்துடனே நித்திரை செய்துவிட்டார் அது அந்தக்கோயில் ஸ்தானிகருக்குத் தெரியாமையால் அர்த்தஜாமமானவுடன் கோயிற்றிருக் காப்பிட்டுக்கொண்டுபோய்விட்டார்கள்.

அவர்கள் போய்விட்டபின்பு சற்றுநேரத்திற்கெல்லாம் நித்திரைநீங்கி எழுந்து மெய்ப்பிணியினாலும பசிப்பிணியினாலும் வருந்தித்தோணியப்பரைத் தோத்திரஞ்செய்தார் உயிருக்குயிரா யெங்கும் நிறைந்திருக்கும் பரமசிவம் அன்பனதுவருத்தத்தைத்திருவுளங்கொண்டு தம்மிடப்பாகத் துமையவளைப் பார்த்தருள, அந்தக்குறி

ப்பையுணர்ந்துகொண்டு சகல வுயிர்களையும்பெற்றவளாகியஉமையவள்கிருபைகூர்ந்து அந்தக்கோயில்பெரிய குருக்களுடையபத்துவயதுள்ள குமாரத்தியைப்போல்வந்துவிசனப்படுகிறவரைப்பார்த்து நீயேன் இப்படிவிசனப்படுகிறாயென்ன.

தாயே நான் பூர்வம்என்னபாவஞ்செய்தேனோ தொலையாதகர்மவியாதிசம்பவிக்க அதனால் வருத்தப்படுகிறதுமன்றி வறுமைநோயென்பதொன்று நேரிட்டதனாலும் வருந்துகின்றேனென்று சொன்னார், அதைக்கேட்டு நீவிசனப்படவேண்டாம்-உனக்கு சம்பவித்திருக்கிற வியாதியும் வறுமையும் நீங்கி நீசௌக்கிய மடைவதற்குநானொரு உபாயஞ் சொல்லுகின்றேன், ஆனாலிப்போஉனக்குமிகுந்தபசியுண்டாயிருப்பதுபோற்காணுகின்றது, அந்தப்பசிதீரஅன்னங்கொடுக்கிறேன் சாப்பிடென்றுகோயில் அன்னம்வட்டகையுடன்கொடுக்கவாங்கிப்புசித்துப்பசிதீர்ந்தவுடனென்தாயே இந்தவியாதிநீங்கத்தக்கவகையெதுவோ அதனைச்சொல்லவேண்டுமெனக்கோயில்குருக்கள்குமாரத்திபோல் வந்திருக்கும் பார்வதியார் நீ சிதம்பரத்திற்குப்போய்ச் சபாநாதரைப்பாடினால்இந்தவியாதிநீங்கிசௌக்கியமடையலாம் இதுதான் உபாயமென்றுசொல்ல.

எனக்குப்பாடத்தெரியாதே நானென்னென்று பாடுவேனென்று சொன்னார், நீ அதைகுறித்துயோசிக்கவேண்டியதில்லை சிற்சபைக்கெதிரில்நின்று தரிசிக்கும்போது அங்குதரிசனத்திற்குவந்திருக்குந்திருக்கூட்டத்தாராலேஎன்னசொல் உண்டாகிறதோ அந்தசொல்லைமுதலாக வைத்துக்கொண்டு பாடத்தொடங்கினால் சபாநாதர் கிருபையினாலேபாடவாக்குண்டாமென்றுசொல்லி உமையவள்ஒருஜோதியாக மறைந்துவிட்டாள், அப்படிமறைந்துவிடவே அச்சமுமிகுந்துயரமுங்கொண்டுஎன் ஞாபகத்திலேகுருக்கள் குமாரத்தியென்றுநினைத்திருந்தேனே, உலோகமாதாவாகியபார்வதியாரென்றுதெரிந்துகொள்ளாதபாவியானேனே இவ்வளவெல்லாங்கட்டளையிட்டருளியஎன்தாய் தன்னுடைய உண்மையைத்தெரிவித்துஎனக்குநேரிட்டிருக்கிறவியாதியையுமிப்போதேதீர்த்துவிடலாகாதா சிதம்பரத்துக்குப்போகும்படி கட்டளையிட்டருளவேண்டுமா ஆனால்திருவுளம்பாங்கெப்படியோ அதுயாராலறியத்தக்கது, ஒருவராலும்அறியத்தக்கதல்லவென்று எண்ணிக்கொண்டு அதுமுதல்நித்திரைசெய்யாமல்திருநிலையாகிய சந்நிதிக்கெதிரில்வந்துதோத்திரஞ் செய்துக்கொண்டிருந்தார், அப்படியிருக்கையிலுதயகாலமானதால் ஸ்தானிகர் முதலான

வர்கள்போய்த்திருக்காப்புநீக்கி உள்ளேசென்றுஅம்மைசந்நிதியில் நிற்பவரை நோக்கிச் சமீபத்தில்வந்து நீஇங்கேஎப்படிவந்தாய் உன்னைஉன்வீட்டார் தேடுகின்றார்களே யென்றுவினவ தான் வந்ததும் தனக்குக்கிடைத்தநன்மையையுஞ்சொல்ல அவர்கள்கேள்விப்பட்டுக் குருக்கள் வீட்டிலிருந்தவட்டகையவரிடத்தி லிருப்பதைக்கண்டதுமன்றி அவர் முகத்தில் ஒருதேஜசு விளங்கியிருப்பதையும்பார்த்து ஆச்சரியமடைந்து அன்றுமுதல் முன்போல் தாண்டவனென்றுஅழைக்கமனம்ஒவ்வாமல் முத்துத்தாண்டவனென்றுஉபசாரமாக அழைக்கத் தொடங்கினார்கள்.

அப்பால் திருவிலையாகியஉத்தாரப்படிபொழுதுவிடிந்தவுடனே புறப்பட்டுச்சிதம்பரத்திற்குப்போனார் அப்படிபோனவர் தில்லையெல்லையைக்கண்டமாத்திரத்தில் சாஷ்டாங்கமாகப்பணிந்தெழுந்துதோத்திரஞ்செய்து உள்ளேபோய் வீதிப்பிரதக்ஷணஞ்செய்துதில்லைமூவாயிரவர்வாசஞ்செய்யும் வீதியையும்வணங்கி ஆலயத்திற்குட்சென்றுசிவகங்கையில் ஸ்நானஞ்செய்துநித்தியாநுஷ்டானவிதிகளைமுடித்துக்கொண்டு ஈரவுடையுடன்சென்று சந்நிதானத்தில் அஷ்டாங்கபஞ்சாங்கத்துடன் பணிந்து எழுந்து துதித்துஅன்பின்மிகுதியால் மனமுருகிப் புளகமடைந்துஆனந்தக்கண்ணீர்பெருகும்படிபரவசப்பட்டு நிற்கையில் நடேசமூர்த்தியின் றிருவருளால்தரிசனத்திற்குவந்திருப்பவர்களில் ஒருவாக்குண்டாக அதனைப்பல்லவியாகவைத்துக்கொண்டு ஒருகீர்த்தனம்பாடித் தோத்திரஞ்செய்தார்.

அதாவது(பூலோககைலாசகிரி சிதம்பரம்)என்று தோத்திரஞ்செய்வதைக் கேட்டருளிச்சபாநாதர் திருவுளத்திற்களிகூர்ந்துஅவருக்கிருந்த வியாதியெல்லாம் நீங்கும்படிகடாட்சித்துஐந்துபொன்பணம்பஞ்சாக்ஷரப்படியின்மேல்வைத்து எடுத்துக்கொள்ளும்படிகட்டளையிட்டருளினார் அந்தக்கட்டளையைமறுக்க அஞ்சுபணத்தையெடுத்துக்கொண்டு தமக்குநேரிட்டிருந்த தீராப்பிணி தீரும்படி ஆனந்தநடேசமூர்த்தி கடாட்சித்தருளிய திருவருளின் பெருமையையெண்ணியெண்ணிக் களிப்படைந்தபின்பும் பலமுறை அஷ்டாங்கபஞ்சாங்கத்துடன்பணிந்து தோத்திரஞ்செய்தபிரியாவிடைபெற்றுக்கொண்டு சீர்காழிக்குப்போய் அன்றுமுதல் தினந்தோறும் சபைக்குவந்து அம்பலவாணமூர்த்தியைத் தரிசித்து அவ்விடத்தில் என் சொல்தம்முடைய செவிக்குக்கேள்வியாகின்றதோ அதையேபல்லவியாகவைத்துக்கொண்டுகீர்த்தனமாவது பதமாவதுபாடிச்சிதம்பரேஸ்வரர்கட்டளையிட்டருளுகின்ற பணமும்பெற்றுக்கொள்ளுகின்

றவர், ஒருநாள் சிற்சபைக்கெதிரில்வந்து நிற்கும்போது சபாநாதர்
கட்டளையினலங்குத்தரிசிக்கின்றதொண்டர்கள் யாதொன்றும்பே
சாமலிருந்தார்கள், அப்போது(போகாதேநெஞ்சேயென்று)ஒருகீர்
த்தனம்பாடிக்கட்டளைப்பிரகாரம்பஞ்சாட்சரப்படியில்வைத்த பண
த்தைப்பெற்றுக்கொண்டுசீர்காழிக்குச்சென்றார் இவ்வாறுநடந்துவ
ருகையில் ஒருநாள்பழையபடிசீர்காழியிலிருந்து புறப்பட்டுச்சிதம்ப
ரந்தரிசனத்துக்கு வருகையில் கொள்ளிடமென்னும்நதியில் அதி
கப்பிரவாகம் ஒருவரும்போகக்கூடாமையாகவிருக்கவே சபாநாத
ரைத்தரிசிப்பதற் கில்லையேயென்னும் ஏக்கங்கொண்டுகொள்ளிடக்க
ரைமேல்நின்று (காணாமல்வீணிலே) காலங்கழித்தேனேயென்று(ஒ
ருகீர்த்தனம்பாடினார் அந்தகீர்த்தனத்தைக்கேட்டருளிச்சபாநாதர்
திருவுளத்திற் கிருபைகூர்ந்து பிரவாகம்விலங்கக் கட்டளையிட்டருள
அந்தநதியைக்கடந்து வருபவர் மனங்களிப்பினால் தரிசனஞ் செய்
வேனேயென்றஒரு கீர்த்தனம்பாடினார் பின்புசிற்சபையில்வந்து ச
பேசனைக்கண்டவுடன் (கண்டபின் கண்குளிர்ந்தேனென்று ஒருகீர்
த்தனம்பாடினார் அதன்பின்பு ஒருநாள்வரும்போது மார்க்கத்தில
தம்மைச்சர்பந்தீண்ட அதற்கு (அருமருந்தென்கிற ஒருகீர்த்தனம்
பாடினார். பாடியவுடன் விஷமிறங்கிற்று இவ்வாறுசபாநாதர்பேரில்
அநேககீர்த்தனங்களும் பதங்களும்பாடித் தோத்திரஞ் செய்து
கொண்டிருந்து சபாநாதரதுகிருபையினால் அநேகமகத்துவம்விளங்
கப்பெற்றுகடைசிநாளில் (மாணிக்கவாசகர்பேரெனக்குத்தரவல்லா
யோவறியேன்) என்கிற கீர்த்தனம்பாடும்போது சிற்சபையில் ஒரு
ஜோதியுண்டாக அந்தசோதியில் விவேகத்துடன் கலந்துவிட்டார்.

சபாநாதர் துணை

முத்துத்தாண்டவர் சரித்திரம் முற்றிற்று.

உ

கடவுள் துணை.

சபாநாதர்பேரில்.

# முத்துத்தாண்டவர்பாடியருளிய

## கீர்த்தனம்-பதம்-இவைகளின்-அகராதி.


| கீர்த்தனம் | பக்கம். | கீர்த்தனம் | பக்கம். | கீர்த்தனம். | பக்கம் |
|---|---|---|---|---|---|
| ஹராஹரசிவ | ௩௨ | கண்டபோ | ௪௰ | தெருவில் | ௫௨ |
| அப்படி | ௪௬ | கலந்துகொ | ௪௩ | தேடித்திரி | ௪௰ |
| அம்பர | ௧௩ | கனவிலுமற | ௫௧ | தேனார்மொ | ௪௫ |
| அம்பலவாணர் | ௨௨ | கனவுகண் | ௫௩ | தோத்திரஞ் | ௩- |
| அருமருந் | ௩௧ | காணமுத்தி | ௩௨ | நடனங்கண் | ௧௨ |
| அவனேதேவ | ௩௫ | காணாமலிரு | ௧௯ | நடிப்பவ | ௨௯ |
| அழைத்துவா | ௪௮ | காணாமல்வீ | ௨௯ | நானேமுழு | ௨௩ |
| ஆசைதீரவே | ௪௮ | கெட்டுப் | ௪௧ | நானேறவி | ௩௮ |
| ஆடிக்கொண் | ௧௮ | சந்ததமுன் | ௧௫ | நிருத்தஞ்செய் | ௨௮ |
| ஆடியபாதா | ௧௯ | சபையில் | ௫௨ | நிர்த்தமிடுந் | ௩௯ |
| ஆடியவேடிக் | ௨௪ | சம்போசங் | ௧௯ | நினைத்துக் | ௫௫ |
| ஆடினதெப்ப | ௧௮ | சுரசமிப்படி | ௧௭ | நீதயவாயெ | ௧௩ |
| ஆட்டுக்காலை | ௨௧ | சாமிகிரச | ௨௨ | நேசமேன | ௫௰ |
| ஆராராசை | ௨௨ | சிதம்பரமே | ௩௮ | பாததரி | ௧௭ |
| ஆநந்தத் | ௨௮ | சித்தரின் | ௧௯ | பிரிந்தாலும் | ௫௫ |
| இனிசுமக்க | ௪௨ | சிவசிதம்பர | ௪௧ | பூலோககயி | ௯ |
| இன்னம்பிற | ௪௩ | சிவந்தமத்த | ௩௫ | பேசவுமொ | ௧௯ |
| ஈசனே | ௧௩ | சிவனேமற | ௩௬ | பேசாதே | ௩௭ |
| உனைநம்பி | ௪௪ | சிற்சபை | ௧௨ | மறவாதிரு | ௩௯ |
| உன்பாத | ௧௫ | சுந்தரகுஞ் | ௩௪ | மனதறியா | ௫௭ |
| எத்தனைத்த | ௫௬ | சேவிக்கவேண் | ௰ | மனதினி | ௫௪ |
| உன்னையென | ௧௪ | சொல்லவாரா | ௫௩ | மனமுழு | ௫௮ |
| என்றுசென | ௩௧ | தனித்திருந் | ௫௧ | மாணிக்கவா | ௪௪ |
| ஏசல் | ௪௬ | தீர்த்தமுதன் | ௧௧ | மாயவித்தை | ௨௰ |
| ஏனோவம் | ௫௰ | தூக்கியபாத | ௩௪ | மையல்மிக | ௫௪ |
| ஐயனேநட | ௨௩ | தெண்டனிட் | ௫௭ | யார்க்குத் | ௩௩ |
| கண்டபின் | ௩௰ | தெரிசனஞ் | ௧௰ | வருவாரவரு | ௪௫ |
| கண்டவர்வி | ௧௭ | தெரிசனமே | ௩௮ | வேண்டாமி | ௪௭ |


அகராதி முற்றிற்று.

—(*)—

௨

கடவுள் துணை.

சபாநாதர்பேரில்

# மாரிமுத்தாப்பிள்ளை முதல்

## சிலவித்வான்கள்பாடிய

## இவைகளின் - அகராதி.


| | | | |
|---|---|---|---|
| அம்பலத்தாடி | ௭௨ | எனிக்தப்பார | ௭௫ |
| ஆடவெடுத்த | ௭௭ | ஒருக்கால்சிவசித் | ௬௩ |
| இதைவிடக்கு | ௭௧ | காலைத்தூக்கி | ௬௫ |
| இன்னமுமொரு | ௬௪ | சிவசிதம்பர | ௬௪ |
| இன்னம்வயிர | ௬௯ | தாண்டவம் | ௮௰ |
| உம்மைப்போ | ௬௫ | திருக்கூத்திற்கு | ௭௮ |
| உன்முகம்பா | ௬௬ | தில்லைச்சிதம் | ௫௯ |
| எந்ததலத்தை | ௬௧ | தில்லைத்தவம் | ௭௬ |
| எங்காளும்வாசமா | ௬௩ | தெய்வீகஸ்தல | ௬௰ |
| எக்நேரமுமொ | ௭௰ | தெரிசிக்கவேண்டு | ௭௯ |
| என்னகாரிய | ௭௪ | தெரிசித்தபேரைப் | ௫௯ |
| என்னதுணி | ௬௭ | பரந்தலையடை | ௬௩ |
| என்னபிழை | ௬௮ | பலமந்திரத்திற் | ௬௨ |
| ஏதுக்கித்தனே | ௭௨ | பாருங்கள் | ௭௩ |
| ஏதுக்குதவி | ௬௬ | விடுமம்பலசாமி | ௬௮ |


முற்றிற்று.

கடவுள் துணை.

சிதம்பரம் சபாநாதர்பேரில்

பாடியருளிய

# முத்துத்தாண்டவர்

# கீர்த்தனம்.

க-கீர்த்தனம்-இம்-கலியாணி-ஜம்பைதாளம்.

பல்லவி.

பூலோககயிலாசகிரிசிதம்பரமல்லாற் புவனத்தில்வேறுமுண்டோ

அநுபல்லவி.

சாலோகசாமீபசாரூபசாயுச்சிய சபைவாரணாரங்கத்
தாண்டவம்புரிவதாற் (பூலோககயி)

சரணங்கள்.

க. நாலுமறைமேருவென்னும் நாலுகோபுரநிலையும் - நவ-ரத்தினம
ணிகளாலொளிசித்திரமதில்களும்மேலுலகையாளவிடுதற்போ
லுயர்ந்தேதவெயில்-விரித்தகம்பத்திரள்களும்
காலுலவுமாயிரக்கால் மணிமண்டபமும்-நவ-சங்கையி னிறை
ந்தசிவ கங்கையின் விலாசமும் ஆலிலையின் மாலுமய னாலுமறி
யாத பேரம்பலமேவுவோர்க் கற்புதம்புரிதலாற் (பூலோககயி)

உ. வேதமுதலெனுமூலநாதர்நாயகியுமேரு-வில்லியார் சிவகாமவல்
லியார்கோயிலும்மாதவர் விண்ணவர்முனிவர்தமோதனா வித்
தியாதரர் மாளிகைகள் குளிகைகளும்
ஏதமொருசற்றுமணுகாதகட்டளைகளுமாவிபோவிலங்குகின்ற
விந்திரவிமானங்களுங் காதலுற்றேகண்ட பூதலத்தேதகொல்லா
ங்காணநாளுமிரங் கண்டுவேண்டுமென்கையாற் (பூலோககயி)

ந. மேவார்பொழியுந்தில்லைமூவாயிரம் புனிதர்வீதியுஞ்சைவர் திருவீதிமடங்களுந் தாவாதபசிதவிர வாவானென்னுஞ்சத்ர சாலையும்பலசோலையும்
பூவாவிகளும்வயலு மோவாமலேபெருகு பொன்னிநதியுந்தெருவும் மன்னியவளங்கண்டுதேவாரமூவர்முதற் பாவாணரனைவருஞ் சிவஸ்தலத்தினிலதிகந்தில்லைவனமென்கையாற் (பூலோ)

---

உ-கீர்த்தனம்-இ-ம-கல்யாணி-ஏகதாளம்.

பல்லவி.

சேவிக்கவேண்டுமையா-சிதம்பரம்-சேவிக்கவேண்டுமையா

அநுபல்லவி.

சேவிக்கவேண்டுஞ் சிதம்பரமூர்த்தியாந்
தேவாதிதேவன் திருச்சந்நிதிகண்டு (சே)

சரணங்கள்.

க. காரானைமாமுகத் தைந்துகரத்தானை கற்பகராயனை முக்குறுணியானைச் சீரார்புலியூர்ப்பதியெல்லை வாசல்வாழ் தேவர்சிறைமீட்குஞ்சேவற்கொடியானை (சேவிக்க)

உ. சிங்காரமான சிவகங்கையின்மூழ்கிச் சிவகாமிசந்நிதிமுன்பாக வேவந்து பாங்காகவே பிரதட்சணமுஞ்செய்து பத்தர்கள் சித்தர்கள்பணிவிடையோர்தொழச் (சேவிக்க)

ந. சிட்டர்பரவுந் திருமூலத்தானைச் சிற்றம்பலமென்னும் பேரம்பலத்தானை அட்டதிக்கும்புகழம்பலவாணனை ஆண்டவனைத் தில்லைத்தாண்டவராயனைச் (சேவிக்க)

ச. நல்லதிருவிழாவானித்திருத்தேரும் நாடெங்குமேபுகழ்நற்கோபுரநான்குந் தில்லைமூவாயிரவர் வளர்வீதியுந் திருமஞ்சனமுமார்கழிதரிசனமுஞ் (சேவிக்க)

---

ந-கீர்த்தனம்-இ-ம-தோடி-ஏகதாளம்.

பல்லவி.

இன்னமொருஸ்தல மின்னமொருகோயி
லின்னமொருதெய்வ மிப்படியுண்டோ

அநுபல்லவி.

பொன்னம்பலத்தினிற் பூமலராயன்
போற்றும்சிதம்பரர் பொற்பதமேயல்லால் (இன்ன)

க. காசிகழுக்குன்றங் காளஸ்திரிகச்சிகமலாலயந்திருவண்ணாமலை
யுறை ரகசியமான தெய்வங்கட் கொடுக்கமும் நடனமு மிங்கே
நளினமுமிங்கே (இன்னமோ)

உ. பாலன்சந்திர சூரியர்மண்டலம்-பாரிக்திரன்பதி பற்றியமண்ட
லம் பூலோகத்திற்குக் கைலாசம் வைகுந்தம்பிரமமண்டலத்து
ப்புதுமையுமிங்கே (இன்னமோ)

ங. கரிசற்பிணிகள் பறந்துபோஞ்சிவகங்கையின் மூழ்கிற் சனகச
பைவந்து தெரிசித்தவளவினிற்பேறவனுமாவன் தெரிசித்தவரை
க்கண்டாற்பேறவனுமாவன் (இன்னமோ)

---

ச-கீர்த்தனம்-இ-ம்-கல்யாணி-ஜம்பைதாளம்.

பல்லவி.

தீர்த்தமுதல்மூர்த்தியுந்தலவிசேஷ மெங்கள்சிவசிதம்பரத்திற்குனே

அநுபல்லவி.

கீர்த்தனஞ்செய்ப் பொருண்மூன்றுமொன்றென்று
கேண்மையோடுவேதாகமம் பகருமாகையால் (தீர்த்த)

சரணங்கள்.

க. தெரிசித்தபோதந்தபிரமனென்னுஞுஞ்செலுத்தும்பாக்கியங்க
ளுண்டாம்-பரிசித்தபோதுலகு பதினாலுமிரட்சிக்கும் பதுமவி
ழியோனாகலாம் உருசிக்குப்பானீயு மன்பாகவுட்கொள்ளினுரு
த்திரன்பதவிபெறலாம் வருசிற்பரானந்தத் தீர்த்தமதிலாடவே
மகேஹசுரனுமேயாகலாம் (தீர்த்த)

உ. கல்லுமுதன் மணல்களுந்துகள்களு மிலிங்கமெனக் கருதும்
வேதங்களெல்லாந தில்லைதனிலுண்டான குளப்படியி னீரெல்
லாஞ்சிவகங்கை யென்றுசொல்லலாம்-தில்லைமாற்புகழுரியகூப
ங்களானந்தகூபமென்றே பகரலாம்-வல்லநடராஜர்பதங் காணு
மலே தலத்தில வசித்தவருமுத்திபெறலாம் (தீர்த்த)

ங. சிங்கைதமிழ்சம்பந்தர்தரிசிக்கயாவருஞ் சிவசுருபமானதிரமும்
நந்திமுதலிந்திராமூவாயிரம்புனிதருமநாரதருந்தொமேத்த
வேவந்துதெரிசித்தவர்க்குமாறுதபேரின்பவாழ்வுதருகின்றபத
மும் கந்தமுறு கோதைசிவ காமிபங்கி னடனமிடு கடவுளாருள்
வடிவாகையால் (தீர்த்த)

௫-கீர்த்தனம்-இ-ம்-நீலாம்புரி-திரிபுடைதாளம்.

பல்லவி.

சிற்சபைதனிலே கண்டுகொண்டேனென்றும்

அநுபல்லவி.

அற்புதக்கூத்தனை நாடி, அவனையென்றுந்தேடி. (சிற்ச)

சரணங்கள்.

௧. வையகந்தருசிவகாமி மாலேகொன்றை-மாலையென வணிந்தானை
மார்தர்க்குமுன்னாலே-யெய்யும்நாள் வாசனையின்மேலேகடற்றி
ரையெனவே வரும்பிறவிதீரும்வகையாலே (சிற்ச)

௨. அடியவர்க்கருள்புரிகுவானைப்பண்டு அரிபூசை-வந்துடன் சக்
கரமழித் தோனைத்-துடியிடையாள் மலைமகள்பங்கோனை அன்
பாய்த்தொழுவதற்குக்கதிகொடுக்குந்தூசவெலியானை (சிற்)

௩. தேவர்வான்கோனயன்மாலாதிகழ் மெய்ம்மைதிகழ்மூவாசிரவ
ரில் நாவொருவனென்றநீதி மூவர்பாடற்கருளனாதி-வந்துமூவுல
குந்தொழுந்தில்லைத்தனிநடஞ்செய்சோதி (சிற்ச)

௪. முனிவர்புரிதவ மகிழ்ந்தேயன்று யின்பமுடிவிலா-லருலளித்த
முதலே நாவென்றுதனியே-யீயரிதியெனவின்று நின்றகாட்சி
யைக்கண்ணுற் கனகசபையருகேநின்று (சிற்ச)

---

௬-கீர்த்தனம்-இ-ம்-ஆஹிரி-ஆதிதாளம்.

பல்லவி.

நடனங்கண்டபோதேயென்றன் சடலஞ்செய் பாக்கியமையா

அநுபல்லவி.

விடமணிந்தமண்டபமன்றுன் மேவுமம்பலவாணாவுன் (நடன)

சரணங்கள்.

௧. அரியயனுந்தேடிக்காணாவுருவாய்நின்றநாரணா-மருமலர்ப்பச்
சிலைகொண்டுருகுமன்பர்சிந்தையொன்று (நடன)

௨. அன்னைதந்தைநீயேயென்றேயுன்னையேயிகநம்பினேன் என்னை
யேநீகாக்கவேண்டுஞ்ஞானசபைநடராஜா (நடன)

௩. பதஞ்சலிவியாக்கிரமபாதரிதயம்புகுந் தாண்டவனேநிதம்பிரி
யாச் சிவகாமிநேசனே சிதம்பரேசனே (நடன)

எ-கீர்த்தனம்-இ-ம்-சங்கராபரணம்-ஆதிதாளம்.

பல்லவி.

ஈசனே-கோடிசூரியப் பிரகாசனே கனகசபை

அநுபல்லவி.

வாசனே-யானந்தநடராஜனே ஈசனே

சரணங்கள்.

க. அறியேனெஞ்சினேசம்பிரியேன் வருங்கருமங்குறியேனறி
வில்லாதசிறியேனென்னை நீயாளாய் ஈசனே

உ. நினையேனுனை யேதும்புனையேன் சிவகங்கையி - னனையேன்
கொடியதீவினையே னுய்யவேயாளாய் ஈசனே

ங. துதியெனவணங்கா வஞ்சமதியேனென்றனுஞ் சபாபதியே
நம்பினேன்சிவகதியே தந்தென்னையாளாய் ஈசனே

---

அ-கீர்த்தனம்-இ-ம்-செஞ்சுருட்டி-ஜம்பைதாளம்.

பல்லவி.

அம்பரசிதம்பரபரம்பரசதாநந்த வடிகண்மறவாதருளு மனுதினமும்

அநுபல்லவி.

செம்பொன்மலைச்சிலைவளைத்த திவ்யபரமானந்தசம்போ
சிவசங்கர ஸ்ரீதாண்டவ நடேசா அம்பர

சரணங்கள்.

க. கங்கைமதியரவக்காதிற் குழையசையச் - செங்கைமழுத்துடி
யசையச் சைவசடையசையப்பொங்குபுலியசையப்பொற்பாத
சிலம்பசைய மங்கைசிவகாமவல்லி மகிழநடம்புரியும் அம்பர

உ. நின்மல நிராலம்ப நிர்க்குண நிரஞ்சன - சின்மயானந்தபர சித்
குணசொரூப-வன்மலக் கோணீக்கியருள் வரியுநவேயெனது
புன்மையாயுமைக்காணப்பொதுவினடம்புரிம் அம்பர

ங. துங்கமறையாகமங்கள் சொன்னவிதிவழுவாமற்சிங்காரமாமெ
ங்கள்செய்துதினந்தினமு - மங்காதநீறுபுனைவைதிகமூவாயிரர்
நங்கோனென்றேபரவநாளும்நடம்புரியும் அம்பர

---

கூ-கீர்த்தனம்-இ-ம்-பந்துவராளி-ஏகதாளம்.

பல்லவி.

நீதயவாயென்னையாளா-யிரு-மாதவர்பாடுங்காளா

அநுபல்லவி.

நாதகிருடியதோளா உமை-காதலா குஞ்சிதத்தாளா நீதயவா

சரணங்கள்.

க. ஒலிகடல்விடமுண்டநேயா - சீறுபுலியினதளுடைய தூயாமெ
வியுமடியவர்சகாயா பதஞ்சலிபுலியணி:டாயா நீதய
உ.. காலனைவதைசெய்தகாலா புலிப்பாலனையாண்டகபாலா-வேல
னைத்தருமனுகூலா ஐந்துகோலனைவென்றதிரிசூலா நீதய
௩. மூவர்பரவியவினோதா திருநாவலூரன்விடுதூதா-யாவரும்நம்
பினபாதா மகாதேவாகனகசபைநாதா நீதய

---

௰-கீர்த்தனம்- இ-ம்-குறிஞ்சி-ஏகதாளம்.

பல்லவி.

உன்னைநம்பினேனையாசரணம் நாகம்

அநுபல்லவி.

புனைசம்போநடராசா புலியூர்வாழீசா உன்னை

சரணங்கள்.

க. இருவர்தம்பிசைகொண்டகாதாதித்திமெனநின்று நடஞ்செய்
யுமிங்கிதப் பொற்பாதா-திருநாவலூரன்விடுதூதா தில்லைச்சிவ
காமி யொருபாகா சிதம்பரநாதா உன்னை
உ.. மழுவிடை தரிக்கின்றகையா கொன்றைமலர்மாலைபுனைகின்றவ
டிசுடர்மெய்யாஎழுபுவிதுதிக்கின்ற துய்யாஅன்பரிடமாயிருந்
தின்பமுடனுளுமையா உன்னை
௩. நெடியமாலயன் தேடிக்காணுதெங்கும் நிறைந்தா வெளும்பொ
ல்லாமணிந்திடும்பூணு அடியவர்தொழுந்தமிழ்வாணு தில்லையம்
பதிநடாராஜா அம்பலவாணு உன்னை

---

கக-கீர்த்தனம்-இ-ட்-ஆனந்தபைரவி-ஏகதாளம்.

பல்லவி.

என்னையெனக்குத்தெரியச்சொல்வாய் தில்லைபொன்னம்பலத்தரசே

அநுபல்லவி.

தன்னையறியுமறிவதுநீ சற்றுந்தப்பவொண்ணுதிப்போ
சாமிசமயம் என்னை

சரணங்கள்.

க. பூதமுநானல்ல பொறிபுலனுனல்ல ஓதுமனுதியொரு நான்கும்
நானல்லபோதக்கருவிபுறம்பல்ல வுள்ளல்லவாதமுதானல்லவெ
ன்று மயங்கும் என்னை

உ. ஒளியல்லவிருளல்ல உடலினிறைவதல்ல வெளிகருப்பல்லவி
ளக்கொத்ததல்ல அனியுமவஸ்தையல்லவவஸ்தைப்பிரிவதல்ல
தெளிவுமறிவுமல்லதெரியாதல்ல (என்னை)

ங. பாசமுநானல்ல பதிபசுநானல்ல பேசிலனுவுமல்லபெரியவுரு
வுமல்ல ஈசரிலங்க விளங்கும்பொருளல்லகோசரமேயேகதேச
முநானல்ல (என்னை)

ச. சேர்ந்து வருவதல்ல சேரா திருப்பதல்ல ஓர்ந்து களிப்பதல்ல
வோராதிருப்பதல்ல போந்துவருவதல்ல போராத்தனியுமல்ல
தீர்ந்தவுயிரேது தில்லைநடேசா (என்னை)

---

கஉ-கீர்த்தனம்-இ-ம்-பரஸ்-ஆதிதாளம்.

பல்லவி.

உன்பாதமேதுணை கிருபைசெய்யாயஞ்ச
லென்பாரெனக்கு வேறிலைமெய்யா

அநுபல்லவி

அன்பாகியப்பலத்தாடுமையா அனல்வடிவென வொளிர்
பனகசயனன்முதலினரனுதினநிரை கனகசபேசா (உன்)

சரணங்கள்.

க. பலதெய்வமுந்தெய்வ மெனக்குறியேன் நின்னையலாதென்மன
திலொன்றையுமறியேன் வலதெள்ளளவுமில்லாச்சிறியேன் மரு
வியவருவினை யிருளறவுருளற மருமுலகரு மகிழ்ந்திடுநடராஜ
(உன்பாதமே)

உ. உன்னளவினிற்சித்த மிரங்காதே வந்து சொன்னதெண்ணாத
பராமுகமேதோ உன்னுதலுவ்வதெப்போவோ உடல்வளைபட
வடரடல்வினைகெட வொருமடவரலொடுமிடும் நடனவினோதா
(உன்பாதமே)

ங. இன்னியவரெவரெனக் கென்குறைதீரா யோகமினிவோரைவாழ்
வித்தவுபகாரா தனியாய்பெரும்பற்றப் புலியூரா பதஞ்சலிதுதி
பாதா முயலக னெளிய மணித பதமருள்தம நடனசபை நாதா
(உன்பாதமே)

---

கங-கீர்த்தனம்-இ-ம்-சௌராஷ்டகம்-அடதாளம்.

பல்லவி.

சந்ததமுன்பாதசேவை தந்தென்மேற்கிருபைபாராய்

அநுபல்லவி.

செந்திருமேவும்புலியூர்வாழ் சிற்சபைநடேசசுவாமி (சந்த)

சரணங்கள்.

க. பண்சிலம்போசையளிக்கப் பாவியென்வினையொழிக்கக்
கண்களானந்தந்துளிக்க கண்டென்மனதுட்களிக்கச் (சங்)

உ. சிந்தூரப்போர்வையுமாடத் தேவர்கள்மறைபாட
ஐந்தெழுத்துருவமாட அணிமலர் தூவிக்கொண்டாடச் (சங்)

ங. பங்கயத்தன்மால்காணப் பாதமனைபொற்பணிபணு
தங்குவில்வாசகிநாணு சம்புவேயம்பலவாணு (சங்)

---

கச-கீர்த்தனம்-இ-ம்-காம்போதி-அடதாளம்.

பல்லவி.

சித்தரின்னமுண்டோ பூலோகத்திற் சித்தரின்னமுண்டோ

அநுபல்லவி.

அத்தர்தில்லைவாழு மப்பலவாண
ராணந்தத்தாண்டவ ராயரல்லாமற்(சித்)

சரணங்கள்.

க. ஒப்பிடுவித்தைக ளெப்படியுலகத்தி லுடலேசெப்பாகவுமே
பந்தாகச்செப்பிடுவித்தைகள் விளையாடினபின்பு செப்புமில்லை
பந்துமில்லை யென்றெளிக்குஞ் (சித்)

உ. இதஞ்சொல்லிக்கின்னரர் கிம்புருடர்பாடவிளந்தனிலம்பிகைக்
கண்களிகூடப் பதஞ்சலிவெம்புலி யஞ்சலிபண்ணப்பதஞ்சலி
யாமற்பண்ணுஞ் (சித்த)

ங. மாலொடுபிரமனுந் தேடரிதான மலர்ப்பதங்கண்டு வணங்கித்
தெரிசிக்கச் சாலோகசாமீப சாரூபசாயுச்சியந்தருந் தாண்டவ
ராயனல்லாமற் (சித்தரின்ன)

---

கரு-கீர்த்தனம்-இ-ம்-கலியாணம்-ஏகதாளம்.

பல்லவி.

காணுமலிருந்தாலென் கலக்கந்தெளியாதே

அநுபல்லவி.

பூணாரமரவணிந்த பொன்னம்பலநாதனைக் (காணு)

சரணங்கள்.

க. திரிபுரத்தையெரித்தானைச் செங்கையின்மான்தரித்தானைக்
கரியுரித்துப்போர்த்தானைக் கங்கைமுடித்தானை
அரியயனுதித்தானை யஞ்செழுத்தாயுதித்தானை
உருவிலியையெரித்தானை யொளிவெண்ணீற்றனைக்(காணு)

உ. தலைமாலைதரித்தானை தக்கன்சிரந்துணித்தானை
உலகெலாம்நிறைந்தானை யுவமையில்லானை
மலைதனுவாய்வளைத்தானை மறலிவிழவுதைத்தானை
கலைமதியைப்புனைந்தானை கண்மூன்றுடையானை (காண)

ந. நாலுகோபுரத்தழகும் நன்மதில்மண்டபத்தழகும்
சீலமிகுந்ததெருவழகும் சிவகங்கையழகும்
ஆலயமிடற்றினிலழகும் ஆடுமம்பலத்தழகும்.
பாலின்மொழியுமையழகும் பரமானந்தத்தழகும் (காண)

---

கசு-கீர்த்தனப்-இ-ம்-ஆகிரிராகம்-ஏகதாளம்.

பல்லவி.

கண்டவர்விண்டிலரே அநுதினம் விண்டவர்கண்டிலரே

அநுபல்லவி.

கண்டவர்விண்டிலர் விண்டவர்கண்டிலர்
அண்டாண்டங்கடந்த ஆதிசோதிபாதம் (கண்டவர்)

சரணங்கள்.

க. முத்திபத்திசத்தி முப்பால்விளைவதல்ல நெற்றியொற்றுமொரு நிலைமைதானுமல்ல தத்தெய்யென்றுதாள மத்தளமதிரவே தித்தியென்று மன்றுளாடுந் திருக்கூத்தைக் (கண்டவர்)

உ. அந்தக்கரணமொருநான்கு சத்தாதியைந்து மடக்கியறிவுடன் கூடிச் சந்தித்துநின்றருள் சற்குருவும்போற்றும் அந்தமதாகிய வானந்தநடனத்தைக் (கண்டவர்)

ந. ஒவ்வதானுமல்ல அவ்வுமிவ்வுமல்ல நவ்வுஞ்சிவ்வுமல்ல நாதநடுவணையிற் சிவ்வுமவ்வுமல்ல சேர்ந்தமட்டமல்ல அவ்வுமூவ்வுமல்ல வாதிருக்கூத்தநடனங் (கண்டவர்)

---

கஎ-கீர்த்தனம்-இ-ம்-ஆனந்தபைரவி-ஆதிதாளம்.

பல்லவி.

பாததெரிசனஞ்செய்யும்போதே-செய்த
பாவம்வெருண்டுநிஜபலமானதே

அநுபல்லவி.

வேதம்பரவுந்தில்லைமன்றுள்மீதே மெத்தமுடிக்குள்ளகாளியுந்திடுக்கிடவுலகமும்நடுக்கிடத்திருத்தியென்றடிக்கிடமடிக்கிடும் (பாத)

சரணங்கள்.

க. பத்தியுடனேபூஜை பண்ணும்பாலன்தன்னைப் பற்றிப்பிடிக்க வந்த பாதகக்காலன் தத்திவிழவே யுதைத்தருள்காலன் வெற்

றித்தாண்டவம்புரிந்தென்னை யாண்டவனெனவரு மாண்டவ ரெலும்பையும் பூண்டவர்சிலம்பணி (பாத)

உ. சுந்தரமூர்த்தியார்தமிழுக்காகவும்பர் தொழுதிடத் தூதுக்கி சைந்தன்பாக அந்தமின்பரவைக்கு முன்பதாகவந்த வரகர சிவகிரி திரிபுரமெரிபட நகைபுரிவரதாய ரமரகசியமான (பாத)

௩. ஆலவிடமருந்துஞ்சர்வேசன் கங்கையணிந்தவன் மாகயிலைமா மலைவாசன் மாதுக்கிளையவுமைமகிழ்நேசன் சதுர்மறைவிரி முடி மிசையுறைபவனமுல் நிகர்கறைவிடவர வொடுபிறையையு மணிபவன் (பாத)

---

## ௧அ-கீர்த்தனம்-இ-ம்-கலியாணி-ஏகதாளம்.

பல்லவி.

ஆடினதெப்படியோ நடனம்நீராடினதெப்படியோ

அநுபல்லவி.

தேடியமெய்ப்பொருளே வளமேவும் சிதம்பரத்தேயொரு சேவடி தூக்கிநின்றாடின (ஆடின)

சரணங்கள்.

௧. ஒன்றல்லரண்டல்ல ஒன்றிரண்டுமல்ல நன்றல்லதீதல்ல நாத விந்துமல்ல அன்றல்லவின்றல்ல வாதியந்தமல்ல மன்றுள்மா கத வல்லிகொண்டாட (ஆடின)

உ. ஆணல்ல பெண்ணல்ல வன்றலியுமல்ல காணரூபமல்ல கா ணாதரூபமல்ல சேனல்லவேயொரு தேவர்க்குள்ளேதேவ வா ணுதற்பச்சை மடந்தைகொண்டாட (ஆடின)

௩. பூதங்களல்ல புறம்பல்லவுள்ளல்ல வெங்களாலே விளங்கும் பொருளல்ல ஆதவன்போலே யசையும்வடிவல்ல மாதுமை யாள்பச்சை வல்லிகொண்டாட (ஆடின)

௪. பஞ்சவர்னமல்ல பஞ்சபூதமுமல்ல நெஞ்சிநினைவுமல்ல நினை விற்கனவுமல்ல அஞ்சுமுகமுமல்ல ஆறாதாரமுமல்ல வஞ்சிமா கத வல்லிகொண்டாட (ஆடின)

---

## ௧௯-கீர்த்தனம்-இ-ம்-மோகனம்-ஏகதாளம்.

பல்லவி.

ஆடிக்கொண்டாரந்த வேடிக்கைக்காணக்கண் ணாயிரம்வேண்டாமோ

அநுபல்லவி.

நாடித்துதிப்பவர் பங்கிலுறைபவர் நம்பர்திருச்செம் பொன்னம்பலவாணர் (ஆடிக்)

சரணங்கள்.

௧. பங்கயச்சிலம்பைந்தாடப் பாதச்சதங்கைகள் கிண்கிணென்
றாடப் பொங்கமுடனே யுரித்துத்தரித்த புலித்தோலசைந்
தாடச் செங்கையிலேந்திய மான்மழுவாடச் செம்பொற்குழை
கண் முயலகனாடக் கங்கையிளம்பிறைச் செஞ்சடையாடக்
கனகசபைதனிலே (ஆடிக்)

௨. ஆசைநவமணிமாலைகளாட மாசுமரவம்படம்விரித்தாடச் சீர
ணிகொன்றைமலர்த்தொடையாடச் சிதம்பரத்தோராட பே
ரணிவேதியர் தில்லைமூவாயிரம்பேர்களும் பூசித்துக்கொண்டு
நின்றாடக் காரணிகாளி யெதிர்த்து நின்றாடக் கனகசபை
தனிலே (ஆடிக்)

௩. நிர்த்தக்கணபதி வேலர்நின்றாட நின்றயன்மாலுட னிந்திரனாட
முப்பத்துமுக்கோடிதேவருடனே முனிவரும்நின்றாட மெய்ப்
பத்திமேவும் பதஞ்சலியாட வியாக்ரமபாதரும் நந்தியுமாட
ஒப்புற்றசிவ காமியம்மையுங்கூடவேநின்றாட (ஆடிக்)

---

௨௰-கீர்த்தனம்-இ-ம்-சௌராஷ்டகம்-ஆதிதாளம்.

பல்லவி.

சம்போசங்கரமஹாதேவா சதாசிவ சம்போசங்கரமஹாதேவா

அநுபல்லவி.

செம்பொற்சபையில்நடனஞ்செய்யுஞ்சிதம்பர அர கர சிவசம்போ

சரணங்கள்.

௧. அரிபிரம்மாவுக்கரியோனே சித்தந்தெளிந்த வன்பர்கள் தமக்
குரியோனே புவனங்களில் திரியுமுப்புரமெரிசெய்த சச்சிதா
னந்தபர ஹர ஹரசிவ (சம்போ)

௨. அனவரததாண்டவராயா கைலைவெற்பை அசைத்தவனைநட்
சித்தநேயா மருவார்கொன்றை புனலொடுமதி தும்பை புனை
யுஞ்சிற்பர ஹரஹரசிவ (சம்போ)

௩. இருமுனிவர்க்கருளும்நாதா மூவாயிரவரென்றுமர்ச்சனை செ
ய்பொற்பாதா வெனையாண்டருள் திரிபுரசிவகாமி தினமும்
மருவிய ஹரஹரசிவ (சம்போ)

---

௨௧-கீர்த்தனம்-இ-ம்-நாதநாமக்கிரியை-ஏகதாளம்.

பல்லவி.

ஆடியபாதா இருவர் பாடியபாதா

அநுபல்லவி.

நீடியவேதா தில்லை நிர்த்தவிநோதா (ஆடிய)

சரணங்கள்.

க. இருமுனிவருமொரு கிருபனுமருகினில் உருகியுருகிமனம் ஹரஹரவெனவே (ஆடிய)

உ. அந்தரதுந்துமியுக் குடியுந்தவில் திந்திமி திமிதிமி திந்திமியெனவே (ஆடிய)

௩. கும்பமுலையுமையாள் சம்ப்ரமத்தொடுகாண உம்பர்தொழ வரு சிதம்பரமதனில் (ஆடிய)

---

உஉ-கிர்த்தனம்-இ-ம்-கர்னடசாரங்கம்-ஏகதாளம்.

பல்லவி.

தெரிசித்தளவின்முத்தி பெறலாம்புலியூரானைத்
தெரிசித்தளவின்முத்தி பெறலாம்

அநுபல்லவி.

தெரிசித்தளவின்முத்தி பெறலாம்புலியூரானைத்
திகம்பரனடம்புரி சிதம்பரதேவனைத் (தெரி)

சரணங்கள்.

க. அரனை மன்மதனைச்சங்கரனை மான்மழுவேந்துங்கரனைச்சடையிற்கங்காதரனைப் பரனைச்சருவதயாபரனைப் பாரதிகம்பரனைத் தில்லைவாழ்ச்சிதம்பரனைச்சங்கரனைத் (தெரி)

உ. பாயனையாண்டவுபாயனை மலைமகள்நேயனை அழிவில்லாக்காயனை தாயனைவைபோகராயனை நால்வேதவாயனைத் தாண்டவராயனைச்சிவாயனைத் (தெரி)

௩. ஈசனையும்பரகேசனை அதிகப்பிரகாசனைக் கைலாசவாசனைப் பூசனைசெய் மன்பர்நேசனைத் திரிபுரநாதனைச் சிவகாமிநேசனைச்சபேசனைத் (தெரி)

---

உ௩-கீர்த்தனம்-இ-ம்-கேதாரகௌளம்-ஏகதாளம்.

பல்லவி.

மாயவித்தைசெய்கிறானே அம்பலவாணன்
மாயவித்தைசெய்கிறானே

அநுபல்லவி.

மாயவித்தைசெய்கிறான் காயமென்றெடுத்துக்கொண்டு
நேயமானவெளிதன்னி லுபாயமாய்க்கூட்டத்திலிருந்து-மாய

சரணங்கள்.

க. உண்டுபண்ணிவைக்கிறான் கொண்டுகொண்டுபோகிறான்
நன்றாக்குந்தீதாக்கும் நடுவாயிருக்கிறான்
பண்டுநானுவெளியெங்கும் பாரெங்குங்காணவொண்ணான்
அண்டர்தொழவம்பலத்தி லெண்டிகட்டிபாடிக்கொண்டு-மாய

௨. உண்கிறானுறங்கிறான் உருவாந்தேரோட்டுகிறான்
சங்கீதத்தைமீட்டுகிறான் தானேதீபங்காட்டுகிறான்
மங்கையுடன்கூட்டுகிறான் மலைக்கக்கண்காட்டுகிறான்
அங்கலிங்கபீடமாக விங்குமங்குமாயசைந்து-மாய

௩. கூட்டுகிறான்வெகுசண்டை மூட்டுகிறான்தத்துவத்தின்
மாட்டுகிறானுலகம்பா ராட்டுகிறான்பின்னையுமோர்
ஆட்டிடையனம்பலத்தி லஞ்சாடுமேய்க்கிறவன்
காட்டுமெய்யிலாறுக்கப்பால் வட்டிலேகுடியிருந்து-மாய

௪. மண்ணுமல்லவிண்ணுமல்ல வாய்வுமல்லதேய்வுமல்ல
பெண்ணுமல்லவாணுமல்ல பேசாமனின்றவிடம்
ஒண்ணிலிருந்தஞ்சையு மூண்டுபண்ணிக்கொண்டவன்
கண்மாயக்காரனென்று கைக்குள்ளேயுஞ்சிக்காமல்-மாய

---

### உ௪-கீர்த்தனம்- இ-ம்-பியாகடை-ஏகதாளம்.

பல்லவி.

ஆட்டுக்காலைத்தாரும் என்சாமிவாதாட்டுக்காலைத்தாரும்

அநுபல்லவி.

ஆட்டுக்காலைத்தேடு மம்பலவாணரே
காட்டுப்புலியும்பாம்புங் காத்துக்கொண்டிருக்குது-ஆட்டு

சரணங்கள்.

௧. கின்னரர்கிம்புருடராதியர் வீணையர்கெருடகாந்தருவர் சித்த
வித்தியாதரர் தன்னிகரில்லாத தந்திரர்மந்திரர் சரணஞ் ச
ரணமென்றிருகைகூப்பிநிற்கப் பொன்னின்விமானத்தர் சிவி
கைவாகனத்தர்பூதகணாதிபர் போற்றியடிவிரும்ப அன்னவாக
னத்தர்பூதகணாதிபர் போற்றியடிவிரும்ப அன்னவாகனத்தன்
விண்ணிலேற வாயனாட்டுக் காலைத்தேடிக் கோட்டுப்பன்றி யா
யினான் ஆட்டு

௨. முப்பத்துமுக்கோடி தேவர்குழாங்களும் முனிவரானவரும் ரி
ஷிகளனைவோருஞ், செப்பமானசந்திராதித்தருங்கூடிச் செய
செயென்றபாதந்தமைத்தேடுகிறார்கள் ஒப்பில்லாதகாளி யம்
பலத்தேநின்று உன்றனைக்கண்டு தொந்தோமென் றாடுகிறாள்,
பெய்யபதாகுமர்தக்காலை எனக்குத்தந்தால் வேண்டுமறபத்
தஞ்சாம்விளையாட்டாகுஞ்சாமி ஆட்டு

௩. ஆக்கியதிசைவளர் திக்குப்பாலகரு மாதிவைரவரும் நாரதனை
வருந்தாக்கியதாவரசங்கம் கோடியுஞ்சந்தித்துப் பாதத்தைக்
காத்துக்கொண்டிருக்கவே, பாக்கியஞ்செய்தவன் முயலகனொ
ருகாலைப்பற்றி முதுகணையில்வைத்துச் சுமந்துகொண்டான்

தூக்கிபொற்றுளை எனக்குத்தந்தாற் றலைசுமக்குஞ் சுமக்கும்
போதும்போதும்போதுஞ்சுமந்தே ஆட்டு

௨௫-கீர்த்தனம்- இ-ம்-தோடி-ஆதிதாளம்.
பல்லவி.
சாமிதரிசனங்கண்டு சபலமானேனுனே
அநுபல்லவி.
வாமியொருபாகர்சபைவாணராதிசபையில் சாமிதெரி
சரணங்கள்.

௧. அநுதினமுமடிபோற்று மடியர்தம்மை நினையாதமனிதனையு
மீடேற்றவரமருளவே, தன்னவெனவேபரதசாஸ்திரவிதி தவ
றுமற்றினமுமுமைகாண நடனஞ்செய்தருள்சிற்சபையில் சா

௨. சோமனுயர்நதிபரவு தூயதாகிய கொன்றைத் தாமமணியுஞ்
செஞ்சடாபரனுர், பூமன்முதன்முடிவோர்கணேமமாத வருட
ன் சாமளசொரூபர் பணியேசபைதனிலே சாமி

௩. தேவாதிதேவரும் தில்லைமூவாயிரவரும் பாவாணர் மூவர்தமிழ்
பாடியவரும், நாவாரவே புகழ்ந்து பூவாலர்ச்சனை செய்து
காவலென்றேதுதிக்கும் கனகசபைதனிலே சாமி

௨௬-கீர்த்தனம்-இ-ம்-கல்யாணி-ஏகதாளம்.
பல்லவி.
அம்பலவாணரேநீரே யன்பர்க்கன்பானசுவாமி
அநுபல்லவி.
செம்பொற்கிளிமொழியாள் சிவகாமிநாதர்நீயே-அம்ப
சரணங்கள்.

௧. காலனையுதைத்தீரே காமனையெரித்தீரே
வேலனையீன்றீரே வேதவஸ்துவும்நீரே-அம்ப

௨. திரிபுரமெரித்தீரே திங்களைத்தரித்தீரே
கரியையுரித்தீரே காலகாலரும்நீரே-அம்ப

௩. இடைபிங்கலையும்நீரே ஏகப்ரம்மமும்நீரே
விடையின்மேல்வருவீரே வெட்டவெளியும்நீரே-அம்ப

௨௭-கீர்த்தனம்-இ-ம்-நாதநாமக்கிரியை-ஏகதாளம்.
பல்லவி.
ஆராராசைப்பட்டார் நின்பாதத்துக் காராராசைப்பட்டார்

அநுபல்லவி

அருள்பாராய் பதந்தாராய் துயர்தீராய் புலியூராய்
நின்பாதத்துக் காரார்

சரணங்கள்.

க. கனகமேனியன் பனகசயனன் கஞ்சனுடன் பதஞ்சலிபோற்ற
அனவரதமுங்கனகசபையு ளாடிச்சிவந்ததென்னைத் தேடிய
பாதத்துக் காரார்

உ. பாதவித்தவெங்கனற் போலுற்றவந்தகன் பாசத்தின்மேவியே
நேசிப்பதேதுணைச் சேவித்தவேளையிலே முத்திபாலிக்குந்தே
வே யென்னையாண்டகோவே நின்பாதத்துக் காரார்

ங. அருவரைதன்னை இருபதுகையாலசைத்துபலன் கொண்டெ
டுத்தராவணன் ஒருபதுதரம்நெரியவே முன்னொருவிரலூன்று
மருமலர்ப்பாதத்துக் காரார்

ச. மூவாயிரவரும் பூவார்மனிதரும் முப்பத்துமுக்கோடி தேவர்
முனிவரும் தேவாதிதேவனே வாவாவென் றேத்திடும் தேசா
சிவகாமிநேசா நின்பாதத்துக் காரார்

---

உஅ-கீர்த்தனம்-இ-ம்-பந்துவராளி-ஏகதாளம்.

பல்லவி.

நானேமுழுதும் நம்பினேன் கனகசபையானே நின்பாதந்தானே

அநுபல்லவி.

ஆனைவாகனமாகக்கொண்டோனே புலியூரானே
அறியேனுன்சிறியேன் பிரியாதருள்செய்வாய் நானே

சரணங்கள்.

க. விடியாமிடியார் கொடியார்பக்கலிற் றமிழ்ப்படியாதருள் செ
ய்யவுங் குடியாயிருக்குமுன் அடியாருடனே யென்னைக்கூட்
டாய் நாட்டாய் திருநடனம் நானே

உ. கனவிலுநனவிலு மனதிலுமுனைநாடிக் கவிபாடித் துதிசெய்ய
வுந்தினமும் வந்தானே யருளுன்பதியை யெண்ணித் திருநா
ள்வருநாளொருநாளுனைக்கண்டு நானே

ங. அந்தரிசிவகாமசுந்தரிமணவாளா வந்தரிதொழுந்தாளா திந்தி
ரிடிகுடிகு திந்திமியெனவாடுஞ் சிவனேசிவனேசிவனே துணை
யென்று நானே

---

உகூ-தாளகீர்த்தனம்-இ-ம்-கௌளிபந்து-ஏகதாளம்.

பல்லவி.

ஐயனே நடனமாடிய பொற்பாதா ஆனந்தக்கயிலாயனே

அநுபல்லவி.

துய்யனே திருச் சபைதனில்தாண்டவந்
தோகுஜெம்தரி தாகுதித்திமி திமிர்தமென்றொரு பாதந்தூக்கிய-ஐ

சரணங்கள்.

௧. கங்கைசடைக்கணிந்த கருணோசாதவளங்கா
அங்கையின்மழுவேந்து மரனேபரமலிங்கா
செங்கைபார்ப்பதிபங்கி ஞானம்வளர்பிரசங்கா
ஜோகுஜெம்தரி தாகுதித்திமி திகுர்தமென்றொரு பாதந்தூக்கிய-ஐ

௨. வேழமுகனைப்பெற்ற விமலாநமச்சிவாயா
ஆழிதரித்தகையா விமலாநமச்சிவாயா
சோழன்கைவெட்டுண்ட தூயாஆனபர்ச்சகாயா
ஜோகுஜெம்தரி தாகுதித்திமி திகுர்தமென்றொரு பாதந்தூக்கிய-ஐ

௩. சித்தஜனுடன்புர மெரித்தபாபநாசா
உத்தண்டசர்வேசா உமைமகிழ்ந்திடுநேசா
சத்திமாகாளிமுன் றலைகுனிந்திடவிசித்
தாகுஜெம்தரி தாகுதித்திமி திகுர்தமென்றொரு பாதந்தூக்கிய-ஐய

---

௩௰-தாளக்கிர்த்தனம்-இ-ம்-தோடி-சாப்புதாளம்.

பல்லவி.

ஆடியவேடிக்கைபாரீர் ஐயராடிய வேடிக்கைபாரீர்

அநுபல்லவி.

தேடியமாலயன்காணாதபாதந் தில்லைமூவாயிரவர்கண்டயதிதர்
தாதொடாமுவார்க்கருணல்கும்பிரக்யாதர் தம்பரமானசிதம்பர நாதர்

சரணங்கள்.

தாகுசேகிண சேகிணங்கிட ததிங்கத்தோம்தரிகிட
ததிங்கத்தோம் தரிகிட ததிங்கத்தோம்
தாகுசேகிண சேகிணங்கிட ததிங்கத்தோம்
ததிங்கத்தோம் திரிகிட ததிங்கத்தோங்கிடத்
ததிங்கத்தோம்கிடத் தத்திமித்தித்திமிதெய்தெய்
ததிங்கத்தோம்கிடக் தத்திமித்தித்திமிதெய்தெய்
தாம்தகுந்தரி தரிகுதிரிகுகு தரிகுஜெம்தரி
தாம்தகுந்தரி தரிகுதிரிகுகு தரிகுஜெம்தரி
தந்ததிந்தந் தந்தணங் தணங்கிமி
தந்ததிந்தக் தந்தணங் தணங்கிமி
தந்ததிங்கிமி தக்கிடத் திக்கிடத்தக
தந்ததிங்கிமி தக்கிடக் திக்கிடத்தக
தத்தடிங்கு தடிங்குடிங்குகு

ததணதஜெணுத ததணதஜெணுத
தத்ததிங்கணத்தோம்
ததிங்கணத்தோம் ததிங்கணத்தோமென (ஆடிய)

க. அதிரும்வாணன்குட முழுவோசைதிசைமுட்ட அந்தரதுந்து
பிநாதமகிலமெல்லாமெட்டசதுர்முகனிசைக்கொத்தங்கருகிற்
றாளந்தட்ட சதியறிந்தயன்றாதை தாக்கிமத்தளங்கொட்ட

தாகுசேகிண சேகிணங்கிட ததிங்கத்தோம்திரிகிட
ததிங்கத்தோம் தரிகிட ததிங்கத்தோம்
தாகுசேகிண சேகிணங்கிட ததிங்கத்தோம்தரிகிட
ததிங்கத்தோம் திரிகிட ததிங்கத்தோம்தரிகிட
ததிங்கத்தோம்கிடத தத்திமிதித்திமிதெய்தெய்
ததிங்கத்தோம்கிடத தத்திமிதித்திமிதெய்தெய்
தாம்தருந்தரி தரிகுதிரிகுகு தரிகுஜெம்தரி
தாம்தருந்தரி தரிகுதிரிகுகு தரிகுஜெம்தரி
தந்ததிந்தந் தந்தணந்தணந்திமி
தந்ததிந்தந் தந்தணந்தணந்திமி
தந்ததிந்திமி தக்கிடத்திக்கிடத்தக
தந்ததிந்திமி தக்கிடத்திக்கிடத்தக
தத்தடிங்கு டிங்கு டிங்குகு
ததணதஜெணுத
ததணதஜெணுத
தத்ததிங்கணத்தோம்
ததிங்கணத்தோம் ததிங்கணத்தோமென (ஆடிய)

உ. விரித்தசெஞ்சடையாட விளங்குகுண்டலமாட மென்கைமான்
மழுவாட மேனியிற்பொடியாடத் தரித்தவெண்புலிதன் மருங்
கிசைந்தாடத் தண்டைகிண்கிணி யிருதாளிலசைந்தாட

தாகுசேகிண சேகிணங்கிட ததிங்கத்தோம்திரிகிட
ததிங்கத்தோம்திரிகிட ததிங்கத்தோம்
தாகுசேகிண சேகிணங்கிட ததிங்கத்தோம்திரிகிட
ததிங்கத்தோம் திரிகிட ததிங்கத்தோம் கிடத
ததிங்கத்தோம்கிடத தத்திமிதித்திமிதெய்தெய்
ததிங்கத்தோம்கிடத தத்திமிதித்திமி தெய்

தாம்தகுந்தரிதரிகு திரிகுகு தரிகுஜெம்தரி
தாம்தகுந்தரி தரிகு திரிகுகு தரிகுஜெம்தரி
தந்ததிந்தந் தந்தணந்தணந்திமி
தந்ததிந்தந் தந்தணந்தணந்திமி
தந்ததிந்திமி தக்கிடத்திக்கிடத்தக
தந்ததிந்திமி தக்கிடத்திக்கிடத்தக
தத்தடிங்கு தடிங்குடிங்குகு
ததணதஜெணுத
ததணதஜெணுத
தத்ததிங்கணத்தோம் ததிங்கணத்தோமென (ஆடிய)

ரு. நன்மைசேர்தும்புரு நாரதரிசைபாட நாரதப்ரமாணந்தத்தழுந் தியாவருந்தேடத்தம்மெய் மறந்திருமாதவர் கூத்தாடத்தைய லுமைமகிழ்கொண்டிருவிழிநாடா

தாகுசேகிண சேகிணங்கிட ததிங்கத்தோம்தரிகிட
ததிங்கத்தோம் திரிகிட ததிங்கத்தோம்
தாகுசேகிணசேகிணங்கிட ததிங்கத்தோம்திரிகிட
ததிங்கத்தோம்திரிகிட ததிங்கத்தோம்கிடத
ததிங்கத்தோம்கிடத தத்திமிதித்திமிதெய்தெய்
ததிங்கத்தோம்கிடத தத்திமிதித்திமிதெய்தெய்
தாம்தகுந்தரிகு திரிகுகு தரிகுஜெம்தரி
தாம்தகுந்தரி தரிகுதிரிகுகு தரிகுஜெம்தரி
தந்திதிந்தந தணந்தணந்திமி
தந்ததிந்தந்தந் தணந்தணந்திமி
தந்ததிந்திமி தக்கிடத்திக்கிடத்தக
தந்ததிந்திமி தக்கிடத்திக்கிடத்தக்க
தத்தடிங்கு தடிங்குடிங்குகு
ததணஜெணுத
தத்ததிங்கணத்தோம்
ததிங்கணத்தோம்
ததிங்கணத்தோமென (ஆடிய)

---

ருக- தாளக்கீர்த்தனம்-இ-ம்-சங்கராபரணம்-ரூபகதாளம்.

பல்லவி.

நடிப்பவனே சிற்சபைநின்று நடிப்பவனே

அநுபல்லவி.

நடிப்பவனேகங்கை முடிப்பவனேமற
படிப்பவனேவிடங் குடிப்பவனே (நடி)

சரணங்கள்.

௧. அரியுமயனும் விண்ணமரர் முனிவருமனகதிந்தார் பனகசயன
மும் உருகியுருகியுள்ளொளியும் வெளியேயொளியும் வெளி
பெறவடியர் துதிசெய
தரிகுதரிகுகு தரிகுதரிகுகுதாம் தாம்தத்தாம்
திரிகுதிரிகுகு திரிகுதரிகுகுதீம் தீம்தித்தீம்
தரிகுதரிகுகுதாம் திரிகுதிரிகுகுதீம்
தரிகுதரிகுகு திரிகுதிரிகுகு
தத்தெய்யத்தெய்யத்
தரிகிடதகததிங்கணத்தோமென்று (நடிப்பவனே)

௨. அண்டாண்டமுமண்டலங்களுமஞ்சலிசெபந்தனத்தொ
டுகண்டுகண்டுளம்மைநந்துபொங்கக் கணங்கணின்றுவணங்
கியின்புற
தந்ததந்தகக தந்ததந்தகதாம் தாம்தத்தாம்
திந்ததிந்திகி திந்ததிந்திதீம் தீம்தத்திதீம்
தந்ததந்தகதாம்
திந்ததிந்திகிதீம்
தந்ததந்தக திந்ததிந்திகி
தந்ததெய்யத்தெய்யத்
தரிகிடதகத ததிங்கணத்தோமென்று (நடிப்பவனே)

௩. பட்டானவர் சிட்டானவர் பத்தானவர்முத்தானவர்
இட்டமாம்புலிநட்டபாதமிணங்கிநின்றுவணங்கியின்புற
தககதகக தகததக தாம் தாம்தத்தாம்
திகிததிகிதிகி திகிததிகிதிகி தீம்தித்தீம்
தககததகதகதாம் திகிததிகிதிகி தீம்
தககதகதககதாம் திகிததிகிதிகி தீம்
தககதககதக திகிததிகிதிகி
தத்ததெய்யத்தெய்யத்
திரிகிடதகதக ததிங்கணத்தோமென்று (நடிப்)

ரூவடிக்கொளித்தாள-கீர்த்தனம்-இ-ம்-ஆனந்தபைரவி-ஆதிதாளம்.

பல்லவி.

நிருத்தஞ்செய்தாரேஐயர் சதானந்த நிருத்தஞ்செய்தாரேஐயர்

அநுபல்லவி.

திருத்தமானமன்றுள் சிவசிதம்பரநாதர்
தித்திமிதிமிதிமி திக்கிடத்திக்கிடத்திகு
தத்திமிதிமிதத் ததிங்கணத்தோமென (நிருத்தஞ்)

சரணங்கள்.

க. அருமறையொலிகதிக்க ஹராஹராஹராஹராஹரஹர வெனவே
அடியவர்குழாந்துதிக்க திருநடவனுமைமகிழ்க்கச் சிவசிவசிவ
சிவசிவசிவவெனவே சேர்ந்திருமுனிகுதிக்க தரிக்கதோந்தத்
திமி தரிகிட தத்தித்தாந்தாந்தாந்
தகண ததணஜெணு தஜெணு தஜெணும்
ததண ததண தகததிங்கணத்தோமென (நிருத்)

உ. தித்திமத்தளநாதந் திந்தோந்திந்தோந் திந்தோமெனவேஜெக்
மெங்கணுமோதப் பத்தஞ் செழுத்தோதப் பம்பம்பம்பம்பம்
பம்பெனவேபகர் திருச்சங்கமுத
தித்தித்தோந் தித்திமிதிரிகிட தித்தித்தீந்தீந்
திரிகுதிரிகுகு ஜெம்ஜெம்ஜெம்தரி
தரிகுதரிதக ததிங்கணத்தோமென (நிருத்)

ந. தாணிபவத்தைக் கெலிக்கத் தகதகதகதகதகதகவெனவே தரி
த்தகைமழுச்சொலிக்க சருநினரெண்ணம்படிக்ககலகலகலகல
கலகலவெனவே காலிற்சதங்கையொலிக்க
தரிகுந் தரிதித்தி தரிகிட தித்திந்தோந்தோந்தோந்
தகணகடிங்குகு தடிக்குடிங்குகு
தகணகணகதக ததிங்கணத்தோமென (நிருத்)

---

கூக-ரூவடிக்கொலிகீர்த்தனம்-இ-ம்-கௌளிபந்து-திரிபுடைதாளம்.

பல்லவி.

ஆனந்தத்தாண்டவமாடினார் தில்லைபம்பலவாணர்

அநுபல்லவி.

ஆனந்தத்தாண்டவமாடிநின்று ரரியருள்சித்தம்பெறச்சக்கொ
டென்றருச்சிக்குந் தனிப்புஷ்பந்தரிச்சுத்தம் பதத்திற்பொற் றிருச்
சிற்றம்பலத்துனின் (ஆனந்தத்தாண்டவம்)

சரணங்கள்.

க. பாதச்சிலம்பு கலீர்கலீர்கலீரென்னப் பைம்பொற் குழைகள் பளீர்பளீர் பளீரென்ன வேதபுராணந் தத்தெய் தத்தெய் தத்தெய்யென்ன விரித்துச் செஞ்சடைக்குப்பொன் தரித்துக் குஞ்சரத்தைக் கொன்றுரித்துத் திண்புரத்தைப்புன் சிரிப்பிற் சங்கரித்துநின் (ஆனந்த)

உ. மால்கைமத்தளந் தஞுதஞுதஞுவென்ன மலரயன்தாளங்கணீர்கணீர்கணீரென்னச் சேல்விழிமாது சபா சபா சபாசென்ன சிறக்கக்கிண்கிணிச்சத்தந் தறைக்குட்கிங்கணுக்கென்று பிரக்கச் சொர்க்கமட்டுக்குந் திறக்கச்சபைதிறக்க (ஆனந்த)

ங. பத்தர்கள்தேகம் விரீர்விரீர்விரீரென்னப் பதஞ்சலி வியாக்கிரர் ஜெயாஜெயாஜெயாவென்ன சித்தகணங்கள் சிவாசிவாசிவாவென்ன திடுக்குச்செந் தணக்குத்திந் திடுக்குச்செந்தணக்கென்ற குடுக்கைக்கைம்புயச் செங்கைபடுக்கத் தொனியெடுக்க (ஆ)

இ ஃ து

## கொள்ளிடக் கரைமேல் நின்றுபாடியது.

கூச-கீர்த்தனம்-இ-ம்-காம்போதி-ஜம்பைதாளம்.

பல்லவி.

காணுமல்விணிலே காலங்கழித்தோமே

அநுபல்லவி.

சேடனார்போற்றுந்தில்லைச் சிதம்பரஸ்தலத்தை (காணுமல்)

சரணங்கள்.

க. சேரன்சோழன் பாண்டியனிரண்ணியவன்மன் கோபுரமுஞ்சூரவீரப்பபூபன் செய்ததிருமதில்களும் பாருலகும்போற்றுகின்றபஞ்சாக்ஷரப்படிகளும் ஆரங்கள்சூழ்ந்த திருவாயிரக்கால் மண்டபமும் (காணுமல்)

உ. கங்கையும்நிறைந்த சிவகங்கையும் படித்துறையும் மங்கைசிவகாமியம்மை வாசல்பணிமண்டபமுந் திங்களணி திருமூலநாதருடசந்நிதியும் பொங்குசெல்வம் போலுயர்ந்த தங்கப்பொம்பலமுங் (காணுமல்)

ங. நிர்த்தசபை கனகசபை சிற்சபையின்தெரிசனமும் முத்திபெறலாமெனவே முழக்குஞ்சின்னத்தொனியும் பத்தர்க்குட்சிறந்த கோவிந்தராஜர் சந்நிதியும் சுற்றிலுந்துலங்க ரத்னசொர்னக்கொடிமரங்கள் (காணுமல்)

௪. தில்லைமூவாயிரவர் முனிவர்பெரும் வீதிகளும் - அல்லும்பகலு மளிக்கமன்னதான சிறப்புஞ்-சொல்லரிய மடங்களுஞ்சோலை களும் வாவிகளும் - நல்லதிருக்கூட்டங்களும் நாலுவிதருவீதி களும் (காணமல்)

௩௫-கீர்த்தனம்-இ-ம்-பைரவி-ஆதிதாளம்.

பல்லவி.

தெரிசனஞ்செய்வேனே முத்திகொடுக்குந் திருவம்பலவாணேசனை

அநுபல்லவி.

அரியயனிருவரு மரியாதவிமலனை
கரியுரிபோர்த்தநங் கருணைக்கடலைத்தேடி

சரணங்கள்.

௧. செஞ்சடை மதிகங்கையுந் திருமுகஞ்சிறந்த பங்கயச்செங்கை யும் பஞ்சாட்சரப்படியும் பாதத்தணிசிலம்பும் நெஞ்சாரவேது தித்துநின் றெனதுகண்ணாரத் (தெரி)

௨. காளியுடன்வாதனையிருமுனிக்குங்காட்சிகொடுத்த நாதனைமா லுடன்பணி யிரணியவன் றனக்கருள் காலகாலனை யன்பர் கருத்திற்குடி கொண்டானைத் (தெரி)

௩. சிவகாமிபிராணேசனை யென்னையாண்டருள் தில்லையம்பதியீசனை அவனிதொழுதயாபரனை யென்னையனை சிவசிதம்பர தேவசிற் றம்பலவாணனைத் (தெரி)

௩௬-கீர்த்தனம்-இ-ம்-சங்கராபரணம்-ஆதிதாளம்.

பல்லவி.

கண்டபின்கண்குளிர்ந்தேன்ஜனனக் கடலைக் கரைகடந்தேன்

அநுபல்லவி.

அண்டர்பிரானைக் கருணைகடாக்ஷனை யம்பலத்தைகண்டபேர்க் கருள்மோக்ஷனை அண்டபகிரண்டமும்படை நேயனையாண்டு வனை நித்தியத்தாண்டவராயனைக் (கண்ட)

சரணங்கள்.

௧. அந்தப்பிறைகங்கைதா னசைந்தாடவே யமரர்முனிவர்சிவசிவ வென்னவே சந்தித்தேயன்புடன் தும்புருநாரதர் சங்கீதமே பக்க விந்தைக்கிசைந்தாமல் மத்தளம்கொட்டவே வேதங்கணீ ரென்று தாளமுழங்கவே திந்தோந்திரிகிடதோதிடி யென்ன வேசிந்தித்து நின்றுமும்பர்கள் கோனைக் (கண்டபின்)

௪. பாவைத்தன்வாசலிற் றாதனை வேதனைப்பத்தர்க்கு முத்தியளித்
திடுங்கர்த்தனைக், கரமதிற்சூலகபாலந்தரித் தானைக் கங்காளனை
ப்பரனை, நிராமயமாகப் புறாந் தருணைகனை நித்தியகல்யாணனைச்
சித்தவினோதனைப் பரம்பரமாகிய வாண்டவனைக் கிருபையா
ரென்பாருக்கருள் பேரம்பலத்தானைக் (கண்)
௫. தண்செல்நல்விழிமாகாளிவா துக்குத் தாக்கனித்தெக்நளிசொல்
லியாண்டு, கண்படைத்தேயெதிர்த் தாடுகின்றான் தலைகவிழ்ந்த
ப்புறம்நிற்கவே, மண்ணிலொருபாதம் விண்ணிலொருபாதமாக
வேவைத் தூர்த்தநடனஞ்செய், தண்ணலைக்கண்ணனை யாரு
முக்கண்ணனை யனங்கனைவென்ற கனகசபேசனை (கண்)

---

## விஷந்தீண்டியவுடன் பாடியது.

௩௭-கீர்த்தனம்-இ-ம்-மோகனம்-ஏகதாளம்.

பல்லவி.

அருமருந்தொருதனிமருந்திது அம்பலத்தேகண்டேனே

அநுபல்லவி.

திருமருந்துடன்பாகமருந்து தில்லையம்பலத்தாடுமருந்து இருவினைக
ளறுக்குமருந்து ஏழையடியர்க்கிரங்குமருந்து (அருமரு)

சரணங்கள்.

௧. கொன்றைதும்பை யணிந்தமருந்து கோதைமீதிற்படர்ந்தமரு
ந்துமன்றுளேநின்றாடுமருந்து மாணிக்கவாசகர் கண்டமருந்து
௨. இந்திராஅனவர்வானவர்தாமு மிருடிகள்தமக் கெட்டாமருந்து
சந்திரசூரியர்காணுமருந்துதானே முளைத்துத்தழைத்தமருந்து
௩. திரித்திதித்தியென்றாடுமருந்து தேவாதிமூவர்கள் காணுமருந்
து, கருத்தைத்திருத்தியிருத்துமருந்து காலனைக்காலாலுதை
த்தமருந்து (அருமரு)

---

௩௮-கீர்த்தனம்-இ-ம்-புன்னாகவராளி-ஆதிதாளம்.

பல்லவி.

என்றுசென்றுகாண்பே னெனதுகண்குளிர

அநுபல்லவி.

மன்றுள்பதஞ்சலி புலியூர்வாழுஞ்சபாபதியை (என்று)

சரணங்கள்.

௧. புண்டரீகமுகத்தழகும் புன்சிரிப்பினழகும் வண்டுநிறவிழியழ
கும் வரிசைதந்தத்தழகும், குண்டலமுஞ்சவுக்கிளியும் கொப்

புதரித்திடுமழகும், மண்டலமெல்லாம் விளங்குங்கண்டசாந்
தழகும் (என்று)

௨. மெய்யெல்லாம்வெண்ணீறுவிளங்கியவற்புதவழகுங்கைகளிலே
தரித்திருக்குங்கனலும்டமருகமும் பையரவம்பூண்ட கையாற்
பயந்தீர்க்குமழகும் வையமெல்லாமுய்யவங்கண் வரவீசுங்கை
யழகும் (என்று)

௩. குஞ்சிதபாதத்தழகுங்குனித்தவோர்பாதத்தழகும், கஞ்சன்மு
டிமாலையொடுநவின்பதக்கத்தழகும், கொஞ்சுமொழி சிவகாமி
கூடனிற்குமழகும் நெஞ்சைவிட்டு நீங்காமனிதமுமனங்களிக்க
என்றுசென்றுகாண்பேனெனறுகண்குளிர (என்று)

---

௩௧-கீர்த்தனம்-இ-ம்-கல்யாணி-ஆதிதாளம்.

அநுபல்லவி.

காணமுத்திதருந்தில்லைத்தானுவாயிருந்துபஞ்சபாணனனைக்கண்
ணுலெரித்த, சோணகிரிவல்லவா புராணசுந்தார் தமிழ்மூவாணருக்
கருள்செயும் நிர்வாணரெனும் பேரம்பலவாணர்தஞ் சிவந்தபாதங்
காணமுத்திபெறலாமே (காண)

சரணங்கள்.

க. பண்டுவிடமுண்டு நீலகண்ட ப்ரஹாசம்பு மூண்டகத்திருமஞ்
ளர்புண்டரீகார்சனர்துதிகொண்டசிவசங்கரபிரசண்டகாலனை
யுதைத்துதண்டனைபுரிநடேசர் புண்டரீகமலர்த்தாளைக் (கா)

௨. பஞ்சவதனமகேசர் குஞ்சரசருமதார் வஞ்சிசிவகாமிநேசர்தஞ்
சமென்றடைந்தவர்தம், நெஞ்சினுதயம்புரிந்தவிஞ்சுகனகசபே
சர் நெஞ்சிலம்பணியொளிர் குஞ்சிதத்தாண்மலரைக் (கா)

௩. தேடரியதிகழ்பாதமாடரவப்பூணணிந்து வேடனுக்கருளிமூவ
ர்பாடவேமனமகிழ்ந்து, நீடியசெஞ்சடையிறுடியகங்கைபுனை
ந்துகூடிவொளிர்நடராசராடிய மலர்ப்பாதத்தைக் (கா)

---

௩௨-கீர்த்தனம்-இ-ம்-ஆனந்தபைரவி-ஆதிராகம்.

பல்லவி.

ஹரகாசிவசிவநமச்சிவாய வெங்களம்மைசிவகாமசவுந்தரிநேயா

அநுபல்லவி.

யாவுந்தொண்டருக் கன்புசெய்யுஞ்சகாய நித்தியபதம்பெற சமயத்தினி னிதம்பரிவாயிருந்து மிதம்பெறவிளையாடுஞ் சிதம்பர தேவா. அரகர

சரணங்கள்.

௧ தினமும் நின்பசேர்வை சேவிக்க வேணுமிந்தத் தெரிசனமே மோட்ச பலமெல்லாங்காணும் வினைவெல்லாமந்த ரூபமாய்த் தோணுமென்றும் நித்தம்பலதேவதைகள் சுற்றம்பலவிருந்தாலும் வெற்றம்பலமாது சிற்றம்பலமாமோ. அரகர

௨ யாவருக்குமுயிர்க்குயிரா யுறைந்தாயேபரம ரகசியமாகவெங் கும்நிறைந்தாயே மூவர்க்குமுதல்வனாய்ச் சிறந்தாயே கருணை முகதா செகசகசகவென நடமிடுகதா வாடமருக்காதாரனே.

௩. பாதிமதியணிந்தபரஞ் சோதியன்பாய்ப்பணிந் தொண்டருக் கெல்லாமநுபூதி ஆதிவுமைபதியாகிய நீதிமிகவு மம்பரமானதி கபர ரூபபரமான சிதம்பரதேவா. அரகர

௪௧-கீர்த்தனம்-இ-ம்-மோகனம் அடதாளம்.

பல்லவி.

யார்க்குத்தெரியுமையா சபாபதிநீ ராடியவிந்தை நாதனேயா

அநுபல்லவி.

தூக்கியபாதா திரிசூலமுங்கையிலேந்தித் தும்புருநாரதர் கிம் புருடர்கின்னரர்சூழப்பொதுவிலன்பாதாழ வாடினவிந்தையார்க்கு த்தெரியுமையா. யார்க்

சரணங்கள்.

௧ பாதச்சிலம்புமசைய உமைமகளிடப்பாகத்திற் கூட்டியொசிய வே வேதகீதங்களும் பின்றேதவே மழுவேந்திவிடையை விட் டிறங்கிச் சடையைவிரித்துக்கொண்டு வேளைபார்த்து வொரு காலைத்தூக்கிக்கொண்டு யார்க்

௨ குண்டலம்ரண்டுதுலங்க திருச்சடையிற் குளிர்கங்காதேவிகு லுங்க பண்டுசுந்தரற்காகப் பாவைக்குத்தூதுசென்று பதுமக ல்வழகிய வதனவிழிசுமந்த பாதம் நோகாமற் சாயவேதம் பாடிக்கொண்ட யார்க்

௩ திருச்சிற்றம்பலம் வாழ்வோய்பத்தி வலையிற்செகந்துதித்திட
விழ்வோய் தரித்திந்தோந் திமிதிரிக் தித்தித்தித் தீந்திமி தக
தகதரிகிட திகிதிகிதிரிகிட தாத்தமியெனத் திருக்கூத்தாடிய
விந்தை யார்க்

௪௨-கீர்த்தனம்-இ-ம்-ஆனந்தபைரவி ஆதிதாளம்.

பல்லவி.

சுந்தரகுஞ்சிதபாதநிலைகண்டு தெண்டுசெய்வாய்மனமே

அநுபல்லவி.

சந்ததந்தில்லை சிவகாமிபங்கனார் தானந்தமாகிய
வானந்தநாடகச் சுந்தர

சரணங்கள்.

௧ அச்சுதன்முன்னாலேமனதாகித்தேடு மாக்கன்றலைகணெருங்கி
டச்சூடு மெச்சியோர்பாம்பும் புலியுங்கொண்டாடும் மேலாஞ்
சிதம்பரந்தன்னின்றுடுஞ் சுந்தர

௨ வெஞ்சினத்தேமனுயிரைமடிக்கும் வீட்டின்பந்தத் தெண்ணங்
தன்னைமுடிக்கும் செஞ்சிலம்புங் கிண்கிணியும் படிக்கும்சிற்ற
ம்பலத்திலென்னாளும் நடிக்குஞ் சுந்தர

௩ நல்லவர்செம்மை மனத்தவர்போற்றும் நம்புமடியார் பிறவி
யைமாற்றுந் தில்லைமூவாயிரர் பூசைசெய்தேத்துந் திருமால்
தன்கண்ணை மலரெனச்சாற்றுஞ் சுந்தர

௪௩-கீர்த்தனம்-இ-ம்-ஆனந்த பைரவி ஆதிதாளம்.

பல்லவி.

தூக்கியபாதத்தி னேக்கொளிகண்டு சும்மாயிருநெஞ்சமே

அநுபல்லவி.

தூக்கியபாதத்தை கண்டவர்க்கேசித்தி சொன்னேன் சொன்
னேன்முக்காலும்வெற்றி தேக்குங்கருணைச் சிவகாமியே சத்தி தில்
லைச்சிதம்பரங் கண்டவர்க்கேமுத்தி தூக்கிய

சரணங்கள்:

௧ பாக்கியமானபராபரங்காணும் பார்ப்பதெல்லா மதுவாகவே
தோணும் வாக்குமனதுக்கெட்டாததுபூணி மன்றுள்நடனமு
னக்குள்ளேகாணுந் தூக்கிய

௨ பிறப்பிறப்பென்னுந் துயர்போயொளிக்கும் பேரின்பமான
சுகமேயளிக்கும் மறப்புநினைப்பு மிலாதமிளிர்க்கும் மன்று
டையானருள் கொண்டுதளிர்க்குந் தூக்கிய

௩ தத்துவமெல்லாந்தலைமாடுமாறுந்தானே நாமானவிடங்கண்டு
தேறும் அத்துவிதப்பொருளாகியேவீறு மானந்தவின்பவயிர்
தம்முள்ளூறுந் தூக்கிய

௪௪-கீர்த்தனம்-இ-ம்-கலியாணி-ஆதிதாளம்.

பல்லவி.

சிவந்தபாதத்தைக்காணவேணுமென்று சிந்தையினினை மனமே

அநுபல்லவி.

தவந்தனக்குப்பயன் தருவோமெனத்தில்லைச்சபையி
னடனமிடுந்தாண்டவராயன் சிவந்த

சரணங்கள்.

௧ அம்பரத்தினின்றமார்கோன்முனிவர்க்கு மாறுசமயவேதசா
ஸ்திரத்தலைவர்க்குஉம்பலர்க்கு முயரிருடிகட்கு முலகிலுள்ள
பேர்களுக்கு யோம்மென்றடிச் சிவந்த

௨ பதஞ்சலிபகவற்கும் வியாக்கிரபாதற்கும் பலருளும் நடனஞ்
செய்த பாதங்காண்பதற்கு நிகழுமவ னருளினாலே திக்கு
மன்பர் நினைவிலுங்கனவிலும் நின்றுநடனம்புரிந்த சிவந்த

௩ காளியுடனேகூடி வாதாடினவிந்தை கண்டதில்லைக் காதாற்
கேட்டதுண் டிப்போது தாளியுடம்பிற்பூசி மான்மழுவுமேந்
தித்தொந்தோமென்றொருகாலைத் தூக்கிநின்றடிச் சிவந்த

௪௫-கீர்த்தனம்-இ-ம்-பந்துவராளி-ஆதிதாளம்.

பல்லவி.

அவனேதேவர்கள்கண்ட வனவனேதேவர்கள்தலைவ
னவனைத்தினமுநினை மனமே

அநுபல்லவி.

தவனேசர்பணிசிதம்பரவாச னொளிருஞ்சிற்பரைநாட
ராஜனெவனோ அவனெவனோ அவனே

சரணங்கள்.

௧ இகலாதியேகனனேகனென்றே திகழுமெழிலான ஜோதியெவ
னோ புகலாதி பூமியான்மாவந்த பாசபரிபூரணமானதெவனோ
சகலாதியெவர் சராசரமாகியே நின்றசம்புநாதனெவனோ அக
லாதியமாருக் காதாரமாந் தெய்வமாமகா தேவனெவனோ
வவனெவனோ அவனே

௨ உருவாலுமருவாலு முருவருவதினாலு மொளிரும் பிரமமெ வனோ விரிவாலுமுயர்வாலு மெவ்வுயிர்க்குமுயிராய் விளங்கிய மெய்யனெவனோ ஒருநாலு மறையாலு முடிக்கலைகளினாலும் ஓதொணாதனெவனோ அரியாலு மயனாலுமடிமுடி யறியாத வாதிமுன்னாதியெவனோ வவனெவனோ அவனே

௩ போனவரிசிரமேறிப்பிளந்திடும் பெரியதாளுமெவனோ நே ரானபங்கயன்சிரமதைக்கிள்ளிடும் நிமலனமலனெவனோ ஏரா னமதனை முன்னுதலின் விழியினாலெரித்த பகவானெவனோ சீரான புலியூரிற் சிவகாமி பங்கனாஞ் சிற்சபாபதி யெவனோ வவனெவனோ அவனே

௪௬-கீர்த்தனம்-இ-ம்-புன்னாகவராளி-ஆதிதாளம்.

பல்லவி.

மறவாதிருநெஞ்சமே உனக்கிது யிறவா மருந்தாமே

அநுபல்லவி.

நறுமாமலர்ப்பொழில்சூழ் தில்லையம்பலநாதர்க்குஞ்சிதச்
செம்பொற்பாதமினைப்பொழுதும் மறவா

சரணங்கள்.

௧ நிச்சயமாகவேகேளா யஞ்செழுத்துண்டுநிற்கும் நிலையையறிந் துச்சரித்துக்கொண்டு வைச்சவழியே சென்றும் அச்சமறவே கண்டு மன்றுளானந்த நடமின்றே கண்டுகொள்ளென்றும் மற

௨ பழையவடியார் திருவடியில் விழ்ந்தெழுந்து பணிசெய்யவே யுரிமைக்கிமனமகிழ்ந்து பிழைலாரமற்காத்துத் திருவடிநிழ லிற் பிசகா திருக்கவைப்ப ராகையால் நீ எப்போதும் மறவா

௩ நினைவாரமுத்திரு மூலத்தானமேசென்று தெரிசனஞ்செய் சிவ காமிசன்னிதிகண்டு அனவரதமுஞ் செம்பொனம்பலத்தாடியவ ரமையப்பர் பொற்றாள் செம்மையாகக்கண்டு மறவா

௪௭-கீர்த்தனம்-இ-ம்-முகாரி-ஆதிதாளம்.

பல்லவி.

சிவனைமறவாதே நினைமனமே-ஒருக்காலும்
சிவனைமறவாதே நினைமனமே

அநுபல்லவி.

அவனியுடன்பசிரண்டங்களையு மளித்தாண்டவனைத்
தாண்டவனையரசம்பலத்தானைச் சிவனை

சரணங்கள்.

௧ நடவாதநடத்தைநடந்தாலுங் கூடியடையாதகொடியகலியரவு
தொடர்ந்தாலும்படையாளர் சிற்றுமடர்ந்தாலும்மாதரகடை
மனைதோறும் நிதங்காத்துகடந்தாலும் சிவனை

௨ பெண்ணாசைவந்துபிடித்தாலும் நம்மைபெண்ணுமலே ஒருவ
ரேசியடித்தாலும் புண்ணுகிமனது துடித்தாலு மோய்ந்துகண்
ணுகிசெவிமூடிக் கால்கள் ஓடித்தாலும் சிவனை

௩ வாரியளறுயிறைத்திட்டாலும் பொன்னும்மேருகிரி வீறுபட
விண்ணுடைபட்டாலும் பாருலகுவாழ்வதுகெட்டாலும் மூர்த்த
யாருமறியாத பழியாமவினைதொட்டாலும் சிவனை

௪ அரியபிரமபதங்களழிந்தாலு மின்னுமிருசுடருமாறி எதிரேறி
யிழந்தாலும் வருணணிம்மண்மாரி பொழிந்தாலும் நாளுந்த
ருமநெறி பகருமறைதவறிமொழிந்தாலும் சிவனை

௫ மருமலர்களணியும்பரனைத் தேவதருவாகிக் கதியின்பந்தருங்
குருபரனை உருவாகிவருந் திகம்பரனைநீலத் திருவுடனேநடன
மிடுஞ்சிதம்பரேஸ்வரனை சிவனே

௪௮-கீர்த்தனம்-இ-ம்-தோடி-ஆதிதாளம்.

பல்லவி.

பேசாதே நெஞ்சமே பேசாதே

அநுபல்லவி.

பேசாதேநெஞ்சே யின்சொல்லிப்பேசியுந்தா னென்னகண்டாய்
ஈசர்புலியூரில்வளர் நேசரனுபூதியல்லாற் பேசா

சரணங்கள்.

௧ சிங்காரவிடையிங்கலே சங்காரவழிபோகாமற்பொங்கமாகவே
நிறுத்தி எங்கள்குரு நாயர்பாதமேத்திக்கோ மனதைத்தேற்
றிக்கோ அருக்கறுத்துக்கோ அஞ்செழுத்தையும் போற்றிக்
கோ நானென்றசத்தம் பேசா

௨ ஆணவமாயைக் கருப்பையு மூழைமெழுத் துள்ளிருத்திச்சோம சேகரபாதத்தை நாமெனக் கருத்துள்வைத்து நாடிக்கோபொருளைத் தேடிக்கோ முத்திவழியைக்கூடிக்கோ ஆனந்தக் கூத்தாடிக்கோ நானென்றசத்தம் பேசா

௩ பட்டிப்பசுக்களைக் துண்டு கொட்டிலிலடைத்துக்கொண்டு எட்டெழுத்துருவையுண்டு பொட்டெனச்செபத்திற்சென்று பூண்டுக்கோ வருவினையென்றுக்கோ நமது ஆண்டவன் தில்லையம்பலத் தாண்டவன் தன்னைநீ கண்டால் பேசா

௩௯-கீர்த்தனம்-இ-ம்-நாதநாமக்கிரியை-ஏகதாளம்.

பல்லவி.

சிதம்பரமேகினைமனமே ஜென்மமீடேறச்
சிதம்பரமேகினைமனமே சிதம்

அநுபல்லவி.

சிதம்பரமேமுத்தி சின்மயமாகிய
பதஞ்சலிபூசித்த பாதரைக்காண சித்

சரணங்கள்.

௧ ஆகமவேத புராணவல்லாச சிவோகமகேச நடேசரைக் காணச் சிதம்

௨ தக்கிடதிக்கிட தரிகிடவெனவே திச்குநடனமிடும்வேதரைக்காணச் சிதம்

௩ திங்கிமிதிமிதிமிதிமிதிமிவெனவே விங்கைநடனமிடும்வேதரைக்காணச் சிதம்

௪ சந்தனலேபன சம்பிரமலாலிரு சந்த வசந்த வசந்தவைபோகரைக்காணச் சிதம்

௫ பத்தியருட்சித காமசவுந்தரி முத்திதரும்பராசத்தியைக்காணச் சிதம்

௬ தரணியிலனைவரும் தயியொடுதுதிசெயு மிரணியவன்மவிநோதரைக்காணச் சிதம்

௭ தேவர்தொழுந்திரு மாயன்தேடு மூவாயிரர்பூசித்தமூர்த்தியைக்காணச் சிதம்

௪௦-கீர்த்தனம்-இராகம்-பியாகடை-ஏகதாளம்.

பல்லவி.

தெரிசனமேகினைமனமே சபாநாதர் தெரிசனமேகினைமனமே

அநுபல்லவி.

தெரிசனமேமுக்தி பரிசனமேநித்ய
வரிசைநடம்புரி வாழ்சபைவாணர் தெரி

சரணங்கள்.

௧ கஞ்சமலருதயன் அஞ்சவனிதைபதி கஞ்சநயனன்பணி
கஞ்சமலர்த்தாள் தெரி

௨ ஆகமத்துட்பொரு ளாகிநிறைந்த சுதாகரமகிமை கோ
ளாநாசலிங்கர் தெரி

௩ கனகாம்பரதரகனகசடாதர கனகசுபாகரகனகசபேசர்
தெரிசனமே நினைமனமே தெரி

௫௧-கீர்த்தனம்-இ-ம்-கலியாணி-ஏகதாளம்,

பல்லவி,

தோத்திரஞ்செய்மனமே உனக்கிது மாத்திரமுற்பனமே

அநுபல்லவி,

காத்தெனையாளும் வெண்ணீற்றனை வார்சடை
யாற்றனையானந்தக் கூத்தனையநுதினம் தோ

சரணங்கள்,

௧ ஈசனைக்கனகசபேசனை ஞானப்பிரகாசனை யோர்சொ
ல்லும்வாசனைப் பதஞ்சலிபூசனை செயுஞ்சர்வேசனைக்
கயிலாசவாசனைத் திருநடராஜனையரனைத் தோ

௨ பரணனையாண்ட நஞ்சுணனை வாசுகி நாணனையக்கினிப்
பூணனைமால் தேடுஞ்சேணனை நித்யகல்யாணனை முத்தி
நிர்வாணனை யம்பலவாணனை யரனைத் தோ

௩ வேளனைமுண்டகத்தாளனை வீறுங்காளனை விபூதித்தா
ளனைப் பாம்பணிதோளனை யடியவர்க்காளனை யாதிரை
நாளனை யுமைமணவாளனை யரனைத் தோ

௫௨-கீர்த்தனம்-இ-ம்-பந்துவராளி-ஏகதாளம்,

பல்லவி,

நிர்த்தமிடுந்திருச் சிற்றம்பலவரை நித்தம்நினைமனமே

அநுபல்லவி.

வித்தைதவருமுயர் புத்திவருஞ்செல்வ
மெத்தவருமொன்று மொத்துவருமன்றுள் நிர்த்

சரணங்கள்,

௧ செந்திருமாலயனிந்திரன் மாதவர்செய்யமுனிவர் செ
யசெயவெற்றிடத் தந்திரமாயொருகாலைத் தூக்கிக்கா
ளிமுன் தாகுதோதிமிதிமிதிமியாவென நிர்த்

௨ சாலபுவனத் தவரவர்போற்றிடச் சந்திராதித்தர்கள் தா
முந்துதித்திடச் செகணதோதிமிதிமிதத்திமிதிமி திருத்
காருதாகுதிக்கிட தத்தியென — கீர்த்

௩ அந்தமுள்ளமாலே செந்தசவுந்தரியான சிவகாமியம்மை
மகிழ்ந்திடத் தந்தநாதன தானதானதன தக்குதிக்கு
டிகு தளங்குதாவென — கீர்த்

௫௩-கீர்த்தனம்-இ-ம்-நாகவராளி ஆதிதாளம்.

பல்லவி.

தேடித்திரியாதே நெஞ்சே தேடித்திரியாதே

அநுபல்லவி.

தேடித்திரிந்து திகையாதேநெஞ்சே
சிற்றின்பத்தாலே ஜெகமெல்லாம்பஞ்சே — தே

சரணங்கள்:

௧ நானென்றவாணவந் தன்னையேநீக்கி நாதாந்தபேரொ
ளிதன்னிலேதாக்கு மோனமாமந்திரத்தூண்மைநோ
க்கு முத்திக்குவித்தாய் முழுகிமதியாக்கு — தே

௨ ஆத்துமஞானிக்கு மெய்தனிற்சொட்டு அண்டாண்டப
கிரண்டங்கள்விட்டுப் போனவானந்தவெள்ளத்தை
மெட்டுபேச்சரையற்ற விடந்தனைக்கிட்டு — தே

௩ போட்டவிடத்திற் பொருள்தனைத்தேடு போதநிஷ்டை
யுட்புகுந்ததுநீயாடு நாட்டமுடன் சற்குருபாதந்தேடி
நாலாம்பதத்திலருள்ஞானவீடு — தே

